Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only
founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C1052)
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 18 வெள்ளிக்கிழமை (04.11.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 35




30 வீதமான மக்கள் மனநலம் பாதிப்பு

08




தேசிய மட்டத்தில் வெண்கலப் பதக்கம்

06



உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பயிற்சி

03



மூன்றாவது வால் நட்சத்திரம்

11

# இலங்கையர் என்பதற்கும் தகுதியற்றது கூட்டமைப்பு



(கொழும்பு)

தமிழ்மக்கள் உட்பட இலங்கையரின் பொறுப்புக்களைக் கூட ஏற்பதற்கான தகுதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இல்லையெனவும், அவர்களால் அவ்வாறு செயற்படவும் முடியாதெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்கா உட்பட பல நாடுகளுக்கான சுற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள போதிலும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துடனான சந்திப்பு இடம்பெறவில்லை என்றும் இது குறித்து அரசாங்கத் தரப்பின் கருத்து என்னவென்றும் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி இல்லை என்ற நிலைப்பாட்டையே அரசாங்கம் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது. இது அரசியல் ரீதியிலும் நிரூபனமாகி உள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன், 18 ஆவது மனித உரிமை கூட்டத் தொடரில் இலங்கையின் பங்களிப்பு தொடர்பான அறிக்கை அமைச்சரவைக்கு (15ஆம் பக்கம் பார்க்க)

## நிர்வாக சேவைப் பரீட்சையில் வடமாகாணத்தில் 12 பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவை வகுப்பு IIIற்கு ஆட்களை இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை (SLAS III) முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவ் ஆண்டுக்கான இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்காக நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சையில் 516 பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

வகுப்பு III ற்கு ஆட்களைத் திரட்டுவதற்கான பரீட்சையில் கிழக்கு மாகாணத்தில் 18 பேரும், வடமாகாணத்தில் 12 பேரும் தமிழ் மொழிமூலப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 9 தமிழர்களும், 9 முஸ்லிம்களுமாக 18 பேர் சித்தியடைந்துள்ளனர். வட மாகாணத்தில் 12 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் 2 பேர் வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவர்கள். 10 பேர் யாழ்.மாவட்டத்தை சேர்ந்தவர்களாவர்.

வடக்கு மாகாணத்தில் சித்தியடைந்தவர்கள் வருமாறு: யாழ்.மாவட்டம்

(15ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சொத்துக்களை கையகப்படுத்த வேண்டும்

## அரசைக் கோருகிறார் ரணில்

(கொழும்பு)

சிங்கள வர்த்தகர்களது தொழில் நிறுவனங்களைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் சட்ட மூலத்தை விடுத்து, சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு இருக்கும் சொத்துக்களை அரசாங்கம் தன்னகப்படுத்தும் சட்டமூலமொன்றை கொண்டு வர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ஸ்ரீ கொத்தாவில் நேற்று இடம் பெற்ற செயலமர்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், சர்வதேச ரீதியிலான விடுதலைப் புலிகளின் சொத்துக்கள் அனைத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். அந்தச் சொத்துக்களை அரசாங்கம் தன்னகப்படுத்தி யுத்த காலத்தில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவ நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச ரீதியில் புலிகளுக்குச் சொந்தமான (15ஆம் பக்கம் பார்க்க)

## நகரப் பாடசாலைகளின் அனுமதிக்காக வறிய மாணவரிடம் பணம் அறவிடக்கூடாது

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பிரபல்யமான நகரப் பாடசாலைகளில் அனுமதிக்காக வறிய மாணவர்களிடமிருந்து பெறப்படுகின்ற பணம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். குறித்த பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சில வடிகால்களை வீதி (15ஆம் பக்கம் பார்க்க)

## சம்பந்தன் – பொன்சேகா உடன்படிக்கை இரகசியத்தை வெளியிட்டது விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கும் இடையில் இரகசிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இரு தரப்புக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடு தொடர்பான ஆவணம் அமெரிக்கா உள்ளிட்ட சில நாட்டு தூதுவராலயங்களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆவணத்தின் பிரதியொன்றை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தமக்கு வழங்கியதாக அமெரிக்கத் தூதுவர் பெட்ரிசியா புட்டினாஸ் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேச அபிவிருத்திக்கு உதவி

(கொழும்பு)

இலங்கை, வடகொரியா, பர்மா, பிலிப்பைன்ஸ் உட்பட ஆசிய-பசுபிக் பிராந்தியத்தின் நெருக்கடி மற்றும் அவசர தேவைகளுக்காக ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்கள் ஒருங்கிணைப்பு அலுவலகம் (the Office for the Coordination of Humanitarian Affairs) 48 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளதாக நேற்று வெளியிட்ட அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீளமைப்பு நடவடிக்கைகளுக்காகவும் நான்கு தசாப்த கால வன்செயல் கிளர்ச்சியினால் அழிவுற்ற பிலிப்பைன்ஸ் தென்பகுதி தீவான மின்டானோவின் புனரமைப்புக்கும் அப்பணத்தின் ஒரு பகுதி செலவிடப்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பரில் பூட்டான், சீனா, நேபாளம் ஆகிய நாடுகளைத் தாக்கிய பூகம்பத்தினால் ஏற்பட்ட அழிவுகள், பங்களாதேஷ் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட வெள்ளம் போன்ற இயற்கை அழிவுகளுக்கும், வடகொரியாவில்

(15ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் இனவாதக் கருத்தை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும்

### ஆனந்தசங்கரி கூறுகிறார்



(யாழ்ப்பாணம்)

நாட்டில் முன்னொருபோதும் இல்லாதளவு இனத்துவேஷம் வளர்ந்து செல்கிறது. அமைச்சர்கள் சிலர் காலத்துக்கு காலம் கக்கும் விஷத்தை அரசாங்கம் முதலில் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். அமைச்சர்களின் கருத்துக்களே இன வெறியை தூண்டுகின்றன என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். அமெரிக்கா சென்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.க்களை பதவியிறக்க வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கப் பெரியார் ஒருவர் உபதேசித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா குடும்பஸ்தரின் சடலம் புதுக்குடியிருப்பு கிணற்றிலிருந்து மீட்பு

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் மக்கள் மீள்குடியேறாத பகுதியான துர்க்கா வீதி என அழைக்கப்படும் தயிர்க் கடை வீதியில் கிணறொன்றில் இருந்து வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த 37 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையான ஜெயபாலன் என்பவரினுடைய சடலம் நேற்று முன்தினம் புதன்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



(15ஆம் பக்கம் பார்க்க)

# இளைஞர் அடாவடியைக் கட்டுப்படுத்த விழிப்புக்குழு ஊடாக நடவடிக்கை

நல்லூர் பிரதேசத்தில் இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்துவதற்கு கிராம அலுவலர்கள் விழிப்புக்குழுக்களின் உதவியைப் பெற்று பொலிஸாருடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு பிரதேச ஒழுங்கிணைப்புத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தலைமையில் பிரதேச செயலகமாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது, அங்கு சிறப்பு விருந்தினராக வருகைதந்திருந்த அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜே/89 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மணியந்தோட்டம் பகுதியில், 12 ஆம் குறுக்கு வீதிக்கு அண்மையில் காணப்படும் மதுபான விற்பனை நிலையத்தின் காரணமாக பெண்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும், தற்போது அங்கு கஞ்சா விற்பனையும் ஆரம்பித்துள்ளதாகவும், பொதுமக்கள் பிரதிநிதிகளால் அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டது.

இதேவேளை ஜே/121, நந்தாவில் தோட்டப்பகுதியில் இளைஞர் குழு குடித்துவிட்டு பொதுமகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் பொதுமக்கள் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயத்தில் பொலிஸாரை நேரடியாக ஈடுபடுத்துவதன் மூலம் ஏறபடும் வீண் முரண்பாடுகளைத் தவிரத்து கிராம அலுவலர்கள் விழிப்புக் குழுக்களையும், பொலிஸாரையும் இணைத்து இவ்விடயத்திற் குத் தீர்வுகாணவேண்டும் என்றார்.

நேற்றைய கூட்டத்தில் சுகாதாரம், நிவாரணம், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. இக்கூட்டத்திற்கு யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, நல்லூர் பிரதேச தலைவர் வசந்தகுமார், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், கிராம அலுவலர்கள் பொதுமக்கள் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர. (26)

## நூற்றாண்டு விழா பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் தாமோதர வித்தியாலய நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை பகல் 1.30 மணிக்கு பாடசாலையில் அதிபர் ச.குருகுலலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் வழக்கறிஞர் இ.தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த நூற்றாண்டுவிழா மலர் வெளியீடும், 25 வருடங்கள் பாடசாலையில் சேவையாற்றிய ஆசிரியர்களைக் கௌரவித்தலும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பௌதீகவியல் ஆசிரியர் பொன்னம்பலம், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(116)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையின் கீழுள்ள மீசாலை, சாவகச்சேரி பொதுநூலகங்களினால் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயும் நூலக வாசகர்களுக்கு இடையேயும் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நகரசபைத் தவிசாளர் இ.தேவசகாயம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் உதவிச் செயலாளர் நா.இன்பராச் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி பி.குகதாசன், தெனமராட்சி வலயக்கல்விப் பணிபபாளர் கு.பிறேமகாந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் கலைநிகழ்வுகளும் இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ11)


**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)

**நோத்சீ லிமிடெட்**

**பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

**வாகன சாரதிக்கான விண்ணப்பம் கோரல்**

**A தர வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.**

**01. வயதெல்லை :- 25 - 35வயதிற்குட்பட்டோர்**

**02. அனுபவம் :- 5 வருட வாகன ஓட்டுனராக இருத்தல் வேண்டும்**

**03. மேலதிக தகைமைகள் :- மின்னியல் அல்லது இயந்திரம் தொடர்பான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**மேற்படி வேலைவாய்ப்பினை பெற விருப்பமுடையவர்கள் தங்கள் சுயவிபரக்கோவை, பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை என்பவற்றுடன் 07.11.2011இத் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்காணும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.**

**கணக்காளர்,<br>நோத்சீ லிமிட்டெட்,<br>குருநகர்,<br>யாழ்ப்பாணம்.**

**தொ.பே:- 021 2222733<br>தொ.நகல்:- 021 2220713<br>மின்னஞ்சல் :-** northesealtd@sltnet.com


## கலந்துரையாடல்

(கரணவாய்)

நெல்லியடி செலான் வங்கி, சூரியன் எப்.எம்முடன் இணைந்து வழங்கும் வாகனக் குத்தகை சம்பந்தமான கலந்துரையாடல்களும், இசை நிகழ்ச்சியும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை நெல்லியடி பஸ் நிலையத்தில் நடை பெறவுள்ளது. என வங்கியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-18)

## நீதிமன்ற அபராதம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மற்றும் உடுப்பிட்டியைச் சேர்ந்த இருவர் வாகன ங்கள் அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திய குற்றத்திற்காக யாழ். நீதி மன்றத்தினால் தலா 1500 குற்றப்பணம் செலுத்துமாறு தீர்பு வழங்கப்பட்டது. (பா)

## வீதி அகலிப்பு

(யாழ்ப்பாணம்)

கந்தப்ப சேகரம் வீதி அகலிப்பு சம்பந்தமாக கடந்த 02.11.2011 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பில் மற்றுமோர் கலந்துரையாடல் எதிர்வரும் 6.11.2011 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மாநகரசபை முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## பாதுகாப்புக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பிரதேசத்திற்கு உரிய சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக மாநாட்டு மட்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவில் பாதுகாப்புக் குழுவினால் நாடலாவிய ரீதியில் பாதுகாப்புக்குழுக்களைச் செயற்படுத்தும் நடவடிக்கையாக தெல்லிப்பளைப் பிரதேசத்திற்குரிய விழிப்புக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது என வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் முரளிதரன் இக்குழுவில் இடம்பெறவுள்ளவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள அழைப்புக்கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார். (39)

## கண்காணிப்புக் குழுக்கூட்டம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கமான நவம்பர் மாத மாதாந்த கண்காணிப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 11.11.2011 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. மாவடிச் சந்தியில் உள்ள பால் கொள்வனவு நிலையத்தின் அங்கத்தவர் சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்.கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர், வலி மேற்கு பிரதேச செயலர், காரை நகர் உதவி அரசாங்க அதிபர் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சேட்டை விட்டவர் மீது தாக்குதல்

இளம் பெண் ஒருவருடன் சேட்டைவிட்ட இளைஞன் ஒருவர் அருகில் நின்ற இளைஞர் குழுவால் தாக்கப்பட்டார். நேற்று நண்பகல் ஸ்ரான்லி வீதிப்பகுதியில் உணவகம் ஒன்றுக்கு முன்னால் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

## மின்தடை அறிவித்தல்

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயரழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டி இருப்பதால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக 05.11.2011 சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

## மீளாய்வுக் கூட்டம்

யாழ்மாவட்ட டெங்கு மீளாய்வுக்கூட்டம் இன்று 4 ஆம் திகதி வெள்ளிகிழமை பி.ப. 2 மணிக்கு யாழ் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் மழை காரணமாக டெங்கு நுளம்பு பரவலாம் என எதிர்பார்த்து அதற்கான நடவடிக்கையை எடுக்கும் நோக்குடன் இவ் மீளாய்வுக்கூட்டம் நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (39)



வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற விவசாயக் கூட்டத்தில் தேசிய வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற வீட்டுத்தோட்ட செய்கையாளர் ஒருவர் பிரதம விருந்தினரிடம் இருந்து சான்றிதழ் பெறுவதையும் ஓய்வுபெற்றுச் செல்லும் வேலணைப் பிரதேச சபையின் செயலாளர் ஜெயரட்ணம் தவராசா பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (85)

மனிதன் தர்மத்தைக் கைவிட்டு உயிரினங்களுக்கு கெடுதல் செய்து துன்புறுத்துகிறான். இந்த நிலை மாற வேண்டுமானால், அவன் தன் மனதை இறைவனை நோக்கித் திருப்ப வேண்டும். - பாபா.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## 'அழுத்த' எதிர்பார்ப்பும் அல்லல் தொடர்கதையும்!

'ஆச்சி பயணம் போகிறாள்' என்பது மாதிரியான ஒரு சுவாரஷ்யத் தொடர்கதையாக கூட்டமைப்பினர் அமெரிக்கா போகிறார்கள் என்பதும் கடந்த சில வாரமாக ஊடகங்களில் விதவிதமான ஊகங்களுடன் எழுதப்பட்டு வந்ததை எல்லோரும் விறுவிறுப்புடன் படிக்க நேர்ந்தது.

அவர்களுடையதும் முன்பின் அறியாத ஒன்றை நோக்கிய புதிர்ப் பயணம்தான் என்பதை கிளம்பு முன்பே அறிவித்துவிட்டுத்தான் சென்றிருந்தார்கள். "அழைத்திருக்கிறார்கள்.... அநேகமாக ஹிலாரி கிளின்டனையும், பான் கீ மூனையும் சந்திப்பதாக இருக்கும்" என்று ஒரு 'க்ளூ'வையும் கொடுத்துவிட்டுச் சென்றாலும் சென்றார்கள்.

பத்திரிகைகளும் இணையங்களும், ஏதோ சர்வதேசம் சட்டைக் கையை மடித்துவிட்டுக் கொண்டு தயாராகிவிட்டது என்பது போல, தமிழ்மக்கள் வாய்பிளந்து பார்க்கக்கூடியதாக நம்பிக்கை பலூன்களைப் பறக்கவிட ஆரம்பித்தார்கள்.

போரின் கடைசி நேரம், அமெரிக்க விமானங்களோ கப்பல்களோ முள்ளிவாய்க்காலுக்கு வந்து எல்லோரையும் அள்ளியெடுத்துக் கொண்டு போகப் போகிறார்கள் என்று கதை கிளப்பியது போன்ற ஒரு பரபரப்புடன், தமிழருக்குச் சர்வதேச அங்கீகாரம் கிட்டியிருப்பதற்குத் தக்க சான்று இதோ வந்துவிட்டது என்றெல்லாம் சொல்லக் கூடிய "கருத்துக் கந்தசாமிகள்" முளைத்தார்கள்.

இவர்கள் போட்ட ஆர்ப்பாட்டங்களைப் பார்த்து, அரசாங்கத் தரப்பினரும் தங்கள் நடுக்கத்தைக் காட்டிக் கொண்டதுதான் இந்தச் சூழ்நிலையை மேலும் தமாஷாக்கியது. பான் கீ மூன் பார்க்காதது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ராஜதந்திரத் தோல்வி என்று, அவர்களை ஏதோ அடுத்த நாட்டுத் தலைவர்களாய்க் காட்டுமளவுக்குத் தன்நிலை மறந்தது அரசுத் தரப்பும்!

உண்மையில் கூட்டமைப்பு பிரதிநிதிகள் பான் கீ மூனைப் பார்த்திருந்தால் என்ன, ஹிலாரியுடன் ஹலோ சொல்லியிருந்தால் என்ன, இந்த நாட்டுப் பிரச்சினை புதிதாக ஒன்றும் ஆகியிருக்கப்போவதில்லை தமிழ் மக்களுக்கு இதை வைத்தும் கொஞ்சக் காலத்துக்கு "விலாசங்காட்ட" கூட்டமைப்புக்கு ஒரு வாய்ப்பு உருவாகியிருக்கும் என்பதைத் தவிர.

இலங்கை அரசை மிரட்டுவதற்கு அவர்கள் ஏதாவது சொல்வார்களா என்று இவர்கள் பார்க்க, பிரச்சினைத் தீர்வுக்கென இவர்களிடம் உள்ள வழி என்ன என்று அவர்கள் பார்க்க, "சரி உங்களுக்கு எங்களிடம் சொல்ல எதுவும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. போய் உங்கள் அரசாங்கத்துடன் பேசி ஒரு முடிவுக்கு வரப் பாருங்கள்" என்று அன்பாகச் சொல்லிக் கைகுலுக்கி எழுந்திருப்பார்கள்.

இவர்கள் வெளியே வந்து, "சர்வதேசம் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க ஆயத்தமாகிறது" என்று, தமிழ்மக்கள் அண்ணாந்து பார்த்துப் புல்லரிக்கும்படி மற்றொரு பலூனைப் பறக்கவிடுவார்கள். பிறகு கனடா, ஐரோப்பா என்று வட்டமடித்து, விருந்துண்டு, விருந்துக்கும் ஒரு விலையைப் பேசி 'கலெக்ஷன்' நடத்தி , போன "அலுவலை" வெற்றிகரமாக முடித்துத் திரும்புவார்கள். இப்படியாகக் கடந்த இரண்டு வாரங்களாக ஊடகங்கள் கொட்டி முழக்கிய "தமிழ் மக்களுக்குக் கிடைத்த இரண்டாவது சர்வதேச அங்கீகாரம்" பயணம் ஒரு முடிவுக்கு வரும் .

"பொறுங்கள், இந்தியா எதையாவது செய்யும்" என்று முன்பு தமிழ் மக்களுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்த கூட்டமைப்பு, அவர்கள் ஆள் மாறி ஆள் வந்து தங்களை அரசாங்கத்துடன் பேசச் சொல்லி நிற்கிறார்கள் என்பதால் சலிப்புற்று, அமெரிக்கா, ஐ.நா. "அழுத்தங்களைக்" கேட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களை இவர்கள் சந்தித்தாலும் சந்திக்காவிட்டாலும் "உங்கள் அரசாங்கத்திடம் நீங்கள் என்னென்ன விடயங்களைக் கேட்கிறீர்கள்" என்று அறிவதும், "அவற்றோடு போய் அரசாங்கத்திடம் பேசுங்கள்" என்று சொல்வதையுமே அவர்கள் வலியுறுத்தப் போகிறார்கள் என்பது வெளிப்படை.

ஆனால், இதற்கு மேலாக வேறேதோ அதிசயம் நிகழும் என்று தமிழ் மக்களுக்கு நம்பிக்கை கொடுத்துக் கொண்டிருப்பதிலேயே கூட்டமைப்பின் தேர்தல் வெற்றிகள் தங்கியிருக்கிறது. எனவே, "சர்வதேச அழுத்தம்" கதைகளைத் தவிர, தமிழ் மக்களுக்கு வாழ்வைப் பெற்றுத் தரும் வேறெந்தத் திட்டமும் அவர்களிடம் இல்லை. கதை கேட்டுக் கதை கேட்டுக் காத்திருப்பதுதான் மக்களுக்கும் பிடித்திருக்கிறது என்றால் என்ன செய்ய முடியும்?

– ஆசிரியர்.

# உள்ளூராட்சி நிர்வாகம் உறுப்பினர்களுக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கான இரு நாள் உள்ளூராட்சி முறைமை பற்றிய அறிவூட்டல் செயலமர்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். நாவலர் வீதியிலுள்ள தியாகி அறக்கொடை நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் காலை 9.00 மணிக்கு இச் செயலமர்வு ஆரம்பமாகவுள்ளது.

சிந்தனைக்கூடம் யாழ்ப்பாணம் என்னும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனம், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கான இயக்கமும் இணைந்து இந்தச் செயலமர்வை நடத்துகின்றன.

தமிழ், சிங்கள புலமையாளர்கள், வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ள இச்செயலமர்வு தமிழ்மொழியில் நடைபெறவுள்ளது

வடமாகாண ஆளுநரின் முன்னாள் செயலாளர் எஸ்.ரங்கராஜன், யாழ் மாநகரசபை ஆணையாளர் எம்.எஸ்.சரவணபவ, பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், பேராசிரியர் எஸ்.கே.சிற்றம்பலம், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தைச் சேர்ந்த சிறியானி விஜயசுந்தர, சட்டத்தரணி சுதர்சன குணவர்த்தன, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## டெங்கு ஒழிப்பு திருப்தியில்லை சுகாதார அமைச்சு கவலை

(கொழும்பு)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் பிரதேச மட்டத்திலான செயற்பாடுகள் திருப்தியளிக்கவில்லை என்று சுகாதார அமைசசு குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களும பிராந்திய சுகாதாரப் பிரிவுகளும் இதன் பொருட்டு நேரடிப் பங்களிப்பினை வழங்குவதில்லை என தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் மலேரியா மற்றும் டெங்கு தொடர்பான பணிப்பாளர் வைத்தியர் சரத் தெனியகே தெரிவித்தார்.

மழையுடனான காலநிலை காரணமாக டெங்குக் காய்ச்சல் மேலும் பரவக்கூடிய அபாயம் நிலவுவதாக அவர் குறிபபிட்டார். குப்பை கூளங்களை அகற்றும் நடவடிக்கைகளில் உள்ளூராட்சி மன்றங்கள் இதனைவிடக் கூடுதல செயற்திறனுடன் செயற்படுவதன் அவசியம் குறித்தும் வைததியர் சரத் தெனியகே சுட்டிக் காட்டினார். டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் மக்களின் ஆர்வம் மிகக் குறைந்த மட்டத்திலேயே நிலவுவதாக மலேரியா மற்றும் டெங்கு தொடர்பான பணிப்பாளர் மேலும் கூறினார்.

## பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழா

### தயாராகிறது இலங்கை

(யாழ்ப்பாணம்)

திறன்மையான விளையாட்டு வீர, வீராங்கனைகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு நாடு முழுவதும் புதிய மைதானங்களை அமைத்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் விளையாட்டு விழாவை முன்னிட்டு இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுவதாக தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல பொது மைதானத்தின் வேலைகளை ஆராய்வதற்காக அந்தப் பிரதேசத்திற்கு அமைச்சர் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

34 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த மைதானம் பல்வேறு குறைபாடுகளால் இதுவரை பயன்பாட்டிற்காகத் திறக்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் மைதானத்தின் பணிகளைப் பூர்த்தி செய்து பிரதேச சபையிடம் ஒப்படைக்குமாறு தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிடிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ருவன்வெல்ல பொது மைதானத்தில் 400 மீற்றர் ஓடுதளம் மற்றும் விளையாட்டுத் தொகுதி என்பனவும் அடங்குகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கனக ஹேரத் மற்றும் வை.ஜீ.பத்மசிறி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# இணைந்து செயற்படுவோம் வாருங்கள் மனோ கணேசனுக்கு மேயர் அழைப்பு

(கொழும்பு)

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கொழும்பு மாநகர சபை நிர்வாகத்தைக் குழப்பித் தோற்கடிப்பதற்காக அரச அதிகாரங்களையும் முறையற்ற செயற்பாடுகளையும் பிரயோகித்துப் பல்வேறு சதித் தந்திரோபாயங்களில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இந்த இக்கட்டான காலகட்டத்தில், மக்களின் தீர்ப்பைக் காப்பாற்றி அவர்கள் அளித்த வெற்றியை உறுதிப்படுத்தி இந்த மாநகரசபை நிர்வாகதகின் மூலம் சகல மக்களுக்கும் சீரான, நீதியான பரிபாலனத்தை முன்னெடுப்பதற்கு உங்களினதும் உங்கள் கட்சி உறுப்பினர்களினதும் பூரண ஒத்துழைப்பு எனக்கு மிகவும் அத்தியாவசியமானது என கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலை வரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான மனோ கணேசனுக்கு அனுப்பி வைத்துள்ள க்டிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தமது தோல்வியை சகித்துக் கொள்ள முடியாத ஆளும் தரப்பினர், மக்களால் தெரவு செய்யப்பட்ட இந்த மாநகரசபை நிர்வாகத்தைக் குழப்பித் தோற்கடிப்பதற்காக அரச அதிகாரங்களையும், முறையற்ற செயற்பாடுகளையும் பிரயோகித்து பல்வேறு சதித் தந்திரோபாயங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை நீங்களும் அறிந்திருப்பீர்கள். மக்கள் தீர்ப்புக்கு எதிரான இந்த ஜனநாயக விரோதச் செயற்பாட்டுக்கு சில சக்திகள் துணை போகின்றமை துரதிஷ்டவசமானது. இந்த நேரத்தில், இந்த இக்கட்டான காலகட்டத்தில், மக்களின் தீர்ப்பைக் காப்பாற்றி அவர்கள் அளித்த வெற்றியை உறுதிப்படுத்தி இந்த மாநகரசபை நிர்வாகத்தின் மூலம் சகல மக்களுக்கும் சீரான, நீதியான பரிபாலனத்தை முன்னெடுப்பதற்கு உங்களினதும், உங்கள் கட்சி உறுப்பினர்களினதும் பூரண ஒத்துழைப்பு எனக்கு மிகவும் அத்தியாவசியமானது என நம்புகின்றேன். ஆகவே இந்த மாநகர சபை நிர்வாகத்தை ஆக்கபூர்வமான வழியில் முனனெடுத்துச் செல்வதற்கு பயனுறுதியுள்ள ஆதரவை வழங்குமாறும், அது குறித்து பகிரங்கமாக அறிவித்து மக்களுக்கு தெளிவுப்படுத்துமாறும் அன்புரிமையுடன் வேண்டுகின்றேன்.

# கமநல சேவை நிலையங்களில் விசேட பயிர்ச் செய்கைத் திட்டம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல கமநல சேவைகள் மத்திய நிலையங்களிலும், பழவகை மற்றும் மரக்கறி வகைகளைப் பயிரிட வேண்டும். அவ்வாறு பயிர்ச் செய்கையை மேற்கொள்ளாத அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்கப் பின்வாங்கப் போவதில்லை என கமநல சேவைகள் மற்றும் வனவிலங்குகள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

நாட்டில் 555 கமநல சேவைகள் மத்திய நிலையங்கள் உள்ளதோடு, அதிகமான நிலையங்களில் காடுகள் வளர்ந்து காணப்படுகிறது. விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக மக்களுக்கு ஆலோசனை வழங்கும் கமநல சேவைகள் நிலையங்களில் காடுகள் வளர்ந்து காணப்படுவது பாரதூரமான குற்றமாகும். எனவே சகல கமநல சேவை நிலையங்களும் முன்மாதிரி நிலையங்களாக அமைய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு வைத்தியசாலைகளின் சேவைகளை இரண்டு ஆண்டுகளில் மேம்படுத்த முடியும்

## வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு வைத்தியசாலைகளில நிலவும் வைத்தியர்கள், தாதியர் கள், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், மருந்தாளர்கள் வெற்றி டங்களை நிரப்ப சுகாதார அமை ச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் தெரிவித்துள் ளார்.

நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இந்தத் தகவலைத் தெரிவித்திருந்தார். இதன் மூலமாக வடபகுதியில் உள்ள வைத்தியசாலைகளின் சேவையினை எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் மேம்படுத்த முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இம் மாதத்தில் இருந்து இந் நியமனங்கள் வடபகுதியில் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப பிட்டார். வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் வைத்தியர் வெற்றிடங்களுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முதல் 118 வைத்தியர்கள் நியமனம் பெறவிருக்கின்றனர். வைதத்தியக் கல்வியை முடித்து வெளியேறும் 600 வைத்தியர்களில் இருந்தே இவ் 118 வைத்தியர்களும் வடக்கிற்கு நியமனம் பெறுகின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சிடம் தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமையவே இந்நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் யாழ். மாவட்டத்தில் 72 வைத்தியர்களும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 28 வைத்தியர்களும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 26 வைத்தியர்களும், மன்னார் மாவட்டத்திற்கு 24 வைத் தியர்களும் வவுனியா மாவட்டத்திற்கு 18 வைத்தியர்களும் நிய மிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

அத்துடன் தாதியர்களும் பொது சுகாதார வைத்திய அதி காரிகள் மருந்தாளர்கள் ஆகியோரும் இவ்வாறு நியமனம் செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

(பா)

## அறிவூட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு உள்ளூராட்சி முறைமை தொடர்பான அறிவூட்டல் கருத்தரங்கு இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ள இரு நாள் கருத்தரங்கில் சித்திரைக் கூட்டம், ஆய்வு நிறுவனம் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், நீதியானதும், சுதந்திரமானதுமான இயக்கமும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளன.

பிரதேச அபிவிருத்தியை மையமாகக்கொண்டு கட்சிப் பேதமின்றி நடைபெறவுள்ள இக்கருத்தரங்கிற்கு நகர சபை, பிரதேச சபைகளின் தவிசாளர், துணைத் தவிசாளர், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் உறுப்பினர் உட்பட மூவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

## ஏகாதசி தீர்த்தமும் குருபூசைத் தினமும்

(குருநகர்)

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் ஏகாதசித் தீர்த்தம் மற்றும் ஆலய ஸ்தாபகர் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரின் ஆறாவது குருபூசைத் தினமும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு சிறப்பு சமயச் சொற்பொழி அருட்கவியின் சிரார்த்தன தின நிகழ்வுகளும் இடம் பெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ஸ்ரீமத் நாராணயர் பூமாதேவி ஸ்ரீதேவி சகிதம் விதியுலா எழுந்தருள்வார்.

மதியம் 12.00 மணிக்கு அடியார்களுக்கான மகேஸ்வர பூசை நடைபெறும். (68)

## கடற்கரைப் பகுதிகளில் கழிவுகள் சிரமத்துக்குள்ளாகும் மீனவர்கள்

(குருநகர்)

குருநகரில் அமைந்துள்ள தொடர்மாடி மனைகளில் வாழ்பவர்கள் சிலரின் நடவடிக்கைகளால் கடற்றொழிலாளர்கள் கடற்கரைகளில் கால்வைக்க முடியாமல் இருப்பதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்துமாடித் தொடரில்லங்களில் வாழ்வோர் குப்பை, கூழங்கள் என்றில்லாமல் போத்தல் ஓடு, பழைய தகரக் கழிவுகள் போன்றவற்றையும் கடற்கரைகளில் கொட்டி வருவதால் அப்பகுதியால் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் காயமடைய நேர்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்மாடி மனைகளுக்கு தெற்குப் பக்கமாக அமைந்துள்ள கடற்கரை ஓரங்களிலே அப்பகுதி குடியிருப்பாளர் மேற்படி கழிவுப் பொருட்களைக் கொட்டி வருவதாகவும் கூறப்படுகிறது.

யாழ். மாநகர சபையினர் இக்கழிவுகளை அகற்றுவதுடன் மேலும் அப்பகுதியில் கழிவுகளைப் போடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படு மெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (68)





அரியாலை மத்தி ஜே:.96 கிராம அலுவலர் பிரிவில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கணவனை இழந்த சிவகுமார் ரஞ்சிமலர் என்ற பெண்மணிக்கு 512 ஆவது படைப் பிரிவின் 7ஆவது கஜபா றெஜிமன்ட் அதிகாரிகளாலும், படையினராலும் அமைக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றபோது, இதில் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் அப்பெண்மணியின் பிள்ளைக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும், கையளிக்கப்பட்ட வீட்டுடன் படையினர் நிற்பதையும் காணலாம். (படம் : பார்த்தீபன், 77)

## ஆசிரிய உதவியாளர்கள் சேவைக்குள் உள்ளீர்ப்பு

ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களை இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படவுள்ளனர். இதன்படி யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரிய உதவியாளர்களில் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகைமையைக் கொண்டுள்ளவர்கள் தங்களது கல்வித் தகைமைச் சான்றிதழ், பட்டச் சான்றிதழ் ஆகியவற்றின் மூலப் பிரதிகள், நிழல் பிரதிகளுடன் எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமூகம் தருமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(21)

## பரிசளிப்பு விழா

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலைப் பரிசளிப்பு விழா இன்று காலை 8.30 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் மு. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த பிரமத விருந்தினராகவும், றிபில் ஏ. மூவிஸ் நிர்வாகி க. செவ்வேள், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம், யாழ் வலய கணித உதவிக் கல்விப் பணிப்பாளரும், தகவல் தொழில்நுட்ப இணைப்பாளருமான வி.எஸ். மகேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஈ.பி.டி.பி. கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ. ஐங்கரன் கௌரவவிருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தேசிய கல்வியியல் கல்லூரிக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(நேற்றைய தொடர்ச்சி)

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், வணிகமும் கணக்கியலும், விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்) ஆகிய பாடநெறிகளுக்குப் புதிய மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16, 17, 18, ஆம் திகதிகளில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியிலும், வெளிமாவட்ட மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

**நாடகமும் அரங்கியலும்**

பி. கோபிகா (சுழிபுரம்), ஜெ. ஜெகதீஸன் (வல்வெட்டித்துறை), பி. பகீந்திரன் (வட்டுக்கோட்டை), பி. பிரதீபன் (நீர்வேலி), டி. தேவகுமார் (கோண்டாவில்), ரி. தேவமனோகரன் (அளவெட்டி), ஆர். எஸ். லோரன்ஸ் (குருநகர்), என். ஜெயபிரியா (பண்டத்தரிப்பு), எஸ். ஜீவனா (சண்டிலிப்பாய்), என். செல்லக்குட்டித்தம்பி (வல்வெட்டித்துறை), எஸ். சந்திரகுமார் (குடத்தனை), எஸ். சுந்தரராசா (வட்டுக்கோட்டை), பி. யாழினி (வட்டுக்கோட்டை), கே. வாகீசன் (வேலணை), வி. விஜயகுமார் (வவுனியா), எஸ். தங்கேஸ்வரன் (செட்டிகுளம்), எஸ். கஜன் (வவுனியா), ரி. அமல்ராஜ் (முள்ளியான்), என். சுசீலன் (பரந்தன்), என். சுந்தரராசா (கிளிநொச்சி), எம். திரவியலிங்கம் (வட்டுக்கோட்டை), வி. சிவலிங்கம் (மானிப்பாய்), ஜெ. கதிர்காமசுந்தரம் (கோண்டாவில்), இ. தனுசியா (வட்டுக்கோட்டை), ஏ. சந்திரலிங்கம் (மானிப்பாய்), கே. உதயரஞ்சன் (குப்பிளான் தெற்கு), எஸ். கார்த்திகா (மானிப்பாய்), கே. ஜிந்துசா (கொக்குவில்), ஜ. சாளினி (வல்வெட்டித்துறை)

**வணிகமும் கணக்கியலும்**

ரி. சசிரூபன் (கொக்குவில்), ரி. சிவானந்தராஜா (பண்டத்தரிப்பு), எஸ். சதாநந்தன் (நல்லூர்), எஸ்.பிராதாப் (வவுனியா), எம். மாலினி (தெல்லிப் பளை), எஸ். சண்முகராஜா (வவுனியா), எஸ். ஸ்ரீகந்தராஜா (வவுனியா), டி.எஸ். பிள்ளை (வவுனியா), ரி. தேவபாலா (வவுனியா), பி. ஆருனிகா சஞ்சீவனி (வவுனியா), ரி. கிஷானந்தி (வவுனியா), ஜி. சஞ்ஜித் (வவுனியா), எஸ். செந்தீபன் (பெரிய பளை), எஸ். தருமரத்னம் (யோகபுரம்), எஸ். நினேஷ் (முல்லைத்தீவு), எல். நிருஷான் (வவுனியா), ரி. குலலோஜினி (கோப்பாய் வடக்கு), என். தேவராசா மல்லாவி), என்.கே. தர்சினி (முல்லைத்தீவு), வி. வினோதினி (முல்லைத்தீவு), எம். யசோதரன் (கொக்கட்டிச்சோலை), ரி. சாளினி (முல்லைத்தீவு), பி. ராகினி (தாழையடி), கே. அபர்ணா (புதுடிக்குடியிருப்பு), பி.சி. பெர்னாண்டோ (மன்னார்), பி. ஏ. குரூஸ் (மன் னார்), ஏ.டி. துரம் (மன்னார்), எஸ். நவரட்ணம் (தாழைடிய), எஸ். ஜீவவினோதரன் (அம்பன் மன்னார்), எஸ்.ஏ. கீர்த்தனா (மன்னார்), ஏ.டொறின் (முருங்கன் மன்னார்), கே. கலைநாதன் (மன்னார்), ஏ. ரதீஸ்குமார் (கிளிநொச்சி), ஏ. விஜயகௌரி (கணேசபுரம்), பி. மகாதேவன் (உதயநகர்), ரி. ரெனிஸ்ரன் (தும்பளை), வி. கார்த்திக் (தொண்டைமானாறு), எம். அம்பிகைபாகன் (அக்கராயன்), என். புருஷோத் (முழங்காவில்), எஸ். உமாகரன் (கோணாவில்), பி. டினேஸ் (ஸ்கந்தபுரம்), ஜெ. துஷாரா (உரும்பிராய் தெற்கு), வி. தங்கராசா (சித்தங்கேணி), கே. ஸ்ரீகிருஷ்ணவாகினி (புலோலி கிழக்கு), கே. கணநாதன் (சுழிபுரம்), எம்.எஸ். குமார் (பாசையூர்), எஸ். சஞ்சீவன் (உடுப்பிட்டி), எம். பிரியங்கா (உடுப்பிட்டி), ரி. மிராஜினி (மானிப்பாய்), எஸ். செல்வரட்ணம் (திருநெல்வேலி கிழக்கு), பி. கார்த்திகா (கரவெட்டி), ஆர். கிருத்திகா (கரவெட்டி), ஏ. அப்புலிங்கம் (கைதடி), ஏ. பிரசாந்தினி (நெல்லியடி), ஏ. தர்ஷானந் (சுன்னாகம்), கே. துளசிகரன் (மானிப்பாய்), ஏ.சிவலோகநாதன் (சாவகச்சேரி), கே. நித்தியானந்தம் (மானிப்பாய்), எஸ். சிவகுமரன் (வட்டுக்கோட்டை), கே. கசீபன் (கொடிகாமம்), வி. பங்கராஜன் (அளவெட்டி), என் சுகந்தினி (மல்லாகம்), ஆர். பாலச்சந்திரன் (அச்சுவேலி), ஏ.எல். குயிந்தன் (குருநகர்), பி. சிவரூபா (கோண்டாவில்), பி. ருஷாந்தன் (கோப்பாய் வடக்கு), பி. ஜெயலிங்கம் (ஏழாலை), கே. நவரத்னராஜா (வட்டுக்கோட்டை). முற்றும்




நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி றோகணவின் ஏற்பாட்டில் சிவில் பாதுகாப்பு குழுத் தலைவர்களுக்கும் கிராம பிரிவு அலுவலர்களுக்குமான சிவில் பாதுகாப்பு குழு சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ராமநாயக்கா மற்றும் பொலிஸ் உப பரிசோதகர் திஸ்ஸநாயக்க ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

# அபிவிருத்தியை விரும்பாதவர்களாலேயே ஊடகங்களில் தவறான செய்தி பரப்பல்

(யாழ்ப்பாணம்)

நாம் மேற்கொண்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரும்பாத சில ஊடகங்கள் தவறான செய்திகளையும் கருத்துக்களையும் தமது சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக மக்களிடம் கொண்டு செல்கின்றன என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் சிறிமோகனன் தலைமையில் தொழில் முயற்சி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் எம் மக்கள் பட்ட துன்பங்கள்,துயரங்கள் நீங்கி சுபீட்சமான எதிர்காலம் பிறந்துள்ளது.

இந் நிலையில் தெளிவானதும் தீர்க்க தரிசனம் வாய்ந்த எமது அரசியல் கொள்கையை ஏற்று எமக்கு பேராதரவு வழங்கும் தீவக மக்களின் நம்பிக்கை தரும் செயற்பாடு பாராட்டிற்குரியது. அவ்வாறே தீவக மக்களின் எதிர்பார்ப்பிற்கு அமைய தீவகப் பிரதேசங்களை துரித கதியில் அபிவிருத்தி செய்து வருகின்றோம்.

எனவே தீவக மக்களாகிய நீங்கள் தொடர்ந்து சரியான அரசியல் வழியை பின்பற்றுங்கள். தேசத்தை துரிதமாக அபிவிருத்தி செய்வோம். சுபீட்சமான ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு கிட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் உபகரணங்களை ஊர்காவற்துறை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊர்காவற்துறை பிரதேச அமைப் பாளருமான காந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் பிரதேச சபை தவிசாளர் காந்தன் உதவி அரசாங்க அதிபர் சிறிமோகனன் உள்ளிட்டோர் வழங்கி வைத்தனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையில் பாடசாலை மாணவ மாணவிகள் 50 பேருக்கு துவிச்சக்கர வண்டிகளும் 50 பயனாளிகளுக்கு தெளிகருவிகளும் 600 பேருக்கு உடுபுடவைகளும் வழங்கப்பட்டதுடன் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையில் 6 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும் 14 பயனாளிகளுக்கு தெளிகருவிகளும் 36 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் 40 பயனாளிகளுக்கு கடற்தொழில் உபகரணங்களும் பயனாளி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி திருத்துவதற்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

# கோட்ட மட்டப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

பன்மைத்துவ கலாசரத்தினூடாக சமாதானம் என்னும் தொனிப்பொருளின் கீழ் வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கோட்டமட்டப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு.

கவிதை

பருத்தித்துறை

பிரிவு -1

ஆர்.றெணாட் கலட்டி ஆர்.சி.ரி எம்.எஸ். ரி. சுபாஸ் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி, ஆர்.நிலக்ஷனா பொலிகண்டி ஏச்.ரி.எம்.எஸ்.

பிரிவு - 11

எஸ். சிந்துஜா மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஜெ.விவேகா பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி, ஆர். விதுர்ஷன் கலட்டி ஆர் சி.ரி.எம். எஸ்.

பிரிவு -111

எம். மாதுரி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, எஸ். சரண்யா புற்றளை மகாவித்தி, கே. சுவஸ்திகா புலோலி எம். எம்.ரி. எம்.எஸ்.

கரவெட்டி

பிரிவு - 1

எல். அருள்ராஜ் நெல்லியடி ம.ம.வி. ஆர். விதுர்னா கரணவாய் ம.வி. வை.சயந்தனா விக்னேஸ்வராக் கல்லூரி.

பிரிவு - 11

வி. சாளினி கரணவாய் மகாவித்தி, எஸ். மிதுனா வட மத்திய மகளிர், பி.பிரியந்தி விக்னேஸ்வராக் கல்லூரி.

பிரிவு - 111

எஸ். அனுசியா கரணவாய் பொன் னம்பலம் எஸ். வித்தகி விக்னேஸ்வராக் கல்லூரி, ஆர். வினோதினி வதிரி இருதயக்கல்லூரி.

பிரிவு - iv

எஸ். மேரி ஜெனிற்றா விக்னேஸ்வராக் கல்லூரி, பி.அர்த்தியா வடமத்திய மகளிர் கல்லூரி, பி. கௌரிசன் நெல்லியடி மத்திய மகாவித்தி.

மருதங்கேணி

பிரிவு - 1

ஜெ.ஜெயவிந்தன் ஆழியவளை சி.சி.ரி. எம்.எஸ். ஏ.டினேசன் மணற்காடு ஆர்.சி.ரி. எம்.எஸ். கே. துளக்ஷனா உடுத்துறை மகாவித்தி

பிரிவு - 11

என். தினுஷா மனற்காடு ஆர்.சி.ரி.எம்.எஸ். ரி.பிருந்தா ஆழியவளை சி.சி.ரி.எம்.எஸ். எஸ். அரிதாஸ் நாகர்கோவில் மகாவித்தி.

பிரிவு - 111

ஆர் ரம்யா உடுத்துறை மகாவித்தி எஸ்.சன்சியா நாகர்கோவில் மகா வித்தி

எல்.பிரதீப் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி,

பிரிவு - iv

ஏ.அகிதா உடுத்துறை மகாவித்தி

தொடரும். (உ-109)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(04.11.2011–வெள்ளிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்

ஐப்பசி 18 ஆம் நாள்.

இராகுகாலம் 10.34–12.04, சுபநேரம் 6.04 –7.34வரை

நட்சத்திரம்: அவிட்டம் மாலை . 6.32 வரை

திதி: நவமி பி.ப. 4.02 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, புதிய பொருள்சேரும், உடம்பு நற்சுகம், பிணக்குத்தீர்தல்.

ரிஷபம:– குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம், சுற்றத்தார் ஆதரவு, நினைத்ததைச் சாதித்தல், உடல் உபாதை.

மிதுனம் :–காசு வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, திருமணப்பேச்சு, அதிகாரிகள் சினம் முக்கிய முடிவுகள்.

கடகம்:– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், வசதிக்குறைவு, வீண் கோபம், மனக்கிலேசம்.

சிம்மம்:– காசுவரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, உடல் சோர்வு, அதிகரிகள் துயர், வீண் கோபம்.

கனனி :– குடும்பத்தில் துயரம், பணக் கஷ்டம், வாய்ப்பு இழப்பு, புதுப்பொருள் சேர்க்கை, உடல் சேர்வு.

துலாம் :–காசுவரும் வசதி வாழ்வு வெறிநாட்டு உதவி, தொழில் விருத்தி, சுற்றத்தார் ஆதரவு.

விருச்சிகம்:– குடும்பத்தில் குழப்பம் பணம் வரும் வசதிக்குறைவு, வாய்ப்பை இழத்தல், நல்லவரவேற்பு.

தனுசு:– காசுக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, வீண் சினம், உறவுகள் ஆதரவு, தேகம் ஆரோக்கியம்.

மகரம:– குடும்பத்தில் கவலை, பணம் வரும், சுற்றத்தார் ஆதரவு, சகோதர வெறுப்பு, பந்தபாசம்.

கும்பம் :– பணக் கஷ்டம், சகோதர உதவி, அதிகாரியின் துயரம். வீண் அலைச்சல், வசதிக்குறைவு.

மீனம் :– குடும்பத்தில் குழப்பம், பணம் வரும் மனதிலே ஓர் உற்சாகம், உடல் உபாதை வசதிக்குறைவு.

# ஆசிரியர் இடமாற்ற சபைக் கூட்டம்

(பருத்தித்துறை)

2012 ஆம் ஆண்டு வன்னி வலயப் பாடசாலைகளில் இருந்து இடமாற்றம் பெறும் ஆசிரியர்களுக்குப் பதிலீடாக விடுவிக்கப்பட இருக்கின்ற ஆசிரியர்களின் விண்ணப்பங்களை அராய்ந்து பதிலீட்டு இடமாற்றத்திற்கு சிபார்சு செய்வது தொடர்பான இடமாற்றச் சபைக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 09.00 மணிக்கு எனது அலுவலக அறையில் நடைபெறவுள்ளது. எனவே ஆசிரியர் இடமாற்றச் சபையின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் V.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

# களஞ்சியப் படுத்துவதற்கு கட்டடங்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் விவசாயிகளினால் செய்கை பண்ணப்படும் வெங்காயத்தைக்கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கு அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இரண்டு புதிய கட்டடங்களை அமைத்துவருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பத்தமேனி, இடைக்காடு ஆகிய பகுதிகளிலேயே இக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுவருவதாகவும், அச்சுவேலியில் உள்ள கிளைவிற்பனை நிலையம் ஒன்றுக்கும் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் பாடசாலையின் சேர்வைத்தியலிங்கம் துரைசுவாமி ஞாபகார்த்த பிரார்த்தனை மண்டபத்தில் அதிபர் சிவசாமி கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஆளுநரின் செயலாளரும் வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருமான இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராகவும் தீவகம் வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளருமான புவனேந்திரன், கௌரவ விருந்தினராகவும் முன்னாள் ஆசிரியை ச.வரதலட்சுமி மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் எனப பலரும் கலந்துகொண்டனர்.

மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி கிருபாஹரி இளங்கோவன் வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (85)

# இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கு பிரஜாவுரிமை வழங்கும் நிகழ்வு

(வவுனியா)

இந்தியாவில் பிறந்த 100 குழந்தைகளுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம்காலை 10.30 மணிக்கு வவுனியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சும் இணைந்து செயற்படுத்திய இத்திட்டத்தில் யுத்தம் காரணமாக இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு சென்ற நிலையில் அங்கு பிறந்த குழந்தைகள் 100 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை சான்றிதழ் வழங்கப்பட்டது.




வவுனியா பிரதேச செயலாளர் அ. சிவபாலசுந்தரன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர், ஐக்கியநாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் உட்பட நோர்வே அகதிகள் பேரவையின் உத்தியோகஸ்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (125)

# கிரீடாசக்தி வீரர்கள் இனங்காணல் வவுனியாவில் 500 பேர் பங்கேற்பு

(வவுனியா)

கிரீடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறந்த வீர, வீராங்கனைகளை இனம்காணும் நிகழ்வு நேற்று வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்றது.

விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள கிரீடா சக்தி நிகழ்வு நேற்று வவுனியா மாவட்டப் பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கு இடையில் இடம்பெற்றது.

இதில் 1994ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு பிறந்த வீர, வீராங்கனைகளை உள்ளடக்கி அமைந்தது.

இத்தேர்வு வவுனியா நகர சபை மைதானம், வவுனியா சைவப்பிரகாச கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், வவுனியா பொது விளையாட்டு மைதானம் ஆகிய மைதானங்களில் இடம்பெற்றது.

இதில் கரப்பந்து, கால்பந்து, கூடைப்பந்து, கபடி, வலைப்பந்து போன்ற போட்டிகளுக்கு வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஒவ்வொரு போட்டிகளுக்கும் தலா ஐந்து வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு, சனி, ஞாயிறு தினங்களில் அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும்.

இப்பயிற்சிகள் 2018ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக இடம்பெற்று, அதில் உடற்தகுதி, ஆட்டத்திறன் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு வீர, வீராங்கனைகள் தேசிய அணியில் இணைத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நேற்றைய இந்த இனங்காணும் நிகழ்வில் 400 முதல் 500 வரையான வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

விளையாட்டுச் செய்திகள்

# துரையப்பா அரங்கில் இன்று கிரீடா சக்தி

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் நாடு தழுவிய ரீதியில் இடம்பெற்று வரும் கிரீடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான சிறந்த வீர, வீராங்கனைகளை இனங்காணும் நிகழ்வு இன்றைய தினம் யாழ். மாவட்டப் பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கு இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

14 - 18 வயதுக்குட்பட்ட வீர, வீராங்கனைகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

இதில் வலைப்பந்து, கரப்பந்து, கபடி, கால்பந்து போன்ற விளையாட்டுக்களில் இருந்து வீர, வீராங்கனைகள் இளங்காணப்படவுள்ளனர்.

இனம்காணப்படும் வீர, வீராங்கனைகளுக்கு தொடர்ந்து 2018ஆம் ஆண்டு வரை பயிற்சிகள் வழங்கப்பட்டு அதன் மூலம் தேசிய அணிக்குள் உள்வாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.


இன்றைய நிகழ்வில் மாவட்டத்திலுள்ள சகல வீர, வீராங்கனைகளையும் தவறாது கலந்து கொண்டு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எஸ்)

# சான்றிதழ், பதக்கத்தை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத் திணைக்களத்தினால் 2011ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வடமாகாண விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி பெறுபேறுகளைப் பெற்ற சகல வீர, வீராங்கனைகளும் தங்கள் சான்றிதழ் மற்றும் பதக்கங்களை உரிய விளையாட்டு உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி விஜய ரூபசிங்கம் தெரிவித்துள்ளார். (எஸ்)

# தேசிய மட்ட கராத்தே யாழ். வீரர் வெண்கலம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட கராத்தேப் போட்டியில் யாழ். மாவட்ட வீரர் எஸ். சிவராசா வெணகலப் பதக்கத்தை வென்றார்.

கறுப்புப் பட்டி மற்றும் மண்ணிறப் பட்டி கராத்தே வீர, வீராங்கனைகளுக்கான தேசிய மட்ட கராத்தேப் போட்டி கடந்த 29ஆம் திகதி கொழும்பு சுகதாஸ விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இதில் மண்ணிறப் பட்டிக்கான 18 வயதுப் பிரிவு சண்டைப் போட்டியில் இருபாலை எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராம வீரர் எஸ். சிவராசா வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

யாழ். மாவட்டம் சார்பாக இப்போட்டித் தொடரில் பங்குபற்றியவர்களில் இவரே பதக்கத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்சே எஸ். விஜயராஜ் அவர்களின் மாணவனான இவ கீறின் பீல்ட் கராத்தே பயிற்சி நிலையத்தில் மேலதிகமாக கராத்தே கலையை கற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிறிமா கிண்ண கிரிக்கெட் கடைசிப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

மாகாண அணிகளுக்கிடையிலான பிறிமா வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரின் வடக்கு கிழக்கு அணி இன்றைய தினம் கடைசிப் போட்டியில் மோதவுள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் இலங்கை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் பிறிமா வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் மாவட்டங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். மாவட்ட தெரிவு அணி சம்பியானாகியது.

தொடர்ந்து மாகாணங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் போட்டிகளில் வடக்குகிழக்கு மாகாணம் பங்கு பற்றியது.

இதில் முதல் போட்டியில் தோல்வியையும், இரண்டாவது போட்டி மழை காரணமாக கைவிடப் பட்டும் இருந்தது.

இந்நிலையில் இன்றைய தினம் மேல்மாகாண தெற்கு அணியுடன் வடக்கு-கிழக்கு மாகாண அணி மோதவுள்ளது. இன்றைய போட்டியில் வடக்கு கிழக்கு மாகாணம் வெற்றிக்காகப் போராடும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இதேவேளை, மாகாணங்களுக்கிடையிலான இப்போட்டித் தொடரில் முதலிரு இடங்களைப் பெற்றுக் கொள்ளும் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் வடக்கு கிழக்கு மாகாண அணிக்கு அந்த வாய்ப்பு பெரும்பாலும் அற்றுப்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென் தோமஸ் கல்லூரி அணிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான சிநேகபூர்வ கால்பந்துப் போட்டி இன்றைய தினம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இரு கல்லூரி அணிகளில் 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இப்போட்டி இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான சிநேகபூர்வ கால்பந்துப் போட்டியில் 20 வயதுப் பிரிவில் அதிக வெற்றிகளைப் பதிவாக்கியுள்ள சென் ஜோன்ஸ் கல்லூரி இப்போட்டியில் வெற்றிபெறும் என அதன் ஆதரவாளார்கள் எதிர்பார்க்கின்றனர்.





யாழ். மத்திய கல்லூரியினால் நடத்தப்பட்ட விபுலானந்தன் நினைவு வெற்றிக் கிண்ணக் கூடைப்பந்தாட்ட பெண்களுக்கான போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்ட இராமநாதன் மகளீர் கல்லூரி அணித் தலைவி விருந்தினரிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதையும் அணி வீரர்களையும் காணலாம். இத்தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (படம் : பா. சிகான்)

# கப்டன் பதவியை எல்லோரும் பலிக்கடாவாகப் பார்க்கின்றனர்

(லாகூர்)

எல்லா நேரங்களிலும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் பதவியை பலிக்கடாவாக எல்லோரும் பார்க்கிறார்கள். பாகிஸ்தான் அணியில் கப்டனாகவோ அல்லது வீரராகவோ மீண்டும் விளையாட எனக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை என்று முன்னாள் கப்டன் அப்ரிடி தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தான் அணியின் கப்டன் பணியை அனுபவித்து செய்தேன். என மீது நம்பிக்கை வைத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எனக்கு கப்டன் பொறுப்பை மீண்டும் அளித்தால் அதனை ஏற்க நான் தயார். அந்த பதவிக் காக அலைய மாட்டேன். பாகிஸ்தான் அணியின் கப்டன் பதவியை யார் வகித்தாலும், அது கடினமான பணியாகும். அணியின் கப்டனாக யார் இருந்தாலும் நான் முழு ஆதரவு அளிப்பேன்.

அணியில் தற்போது இடம்பிடித்துள்ள இளம்வீரர்களின் செயற்பாடு சிறப்பான வகையில் அமைந்து வருகின்றது. இதன் மூலம் இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் வெல்ல முடிந்தது. களத்தடுப்பில் இன்னும் முன்னேற்றம் தேவை. அதை விரைவில் சீர்செய்ய வேண்டும்.

பாகிஸ்தான் வீரர்கள் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக லண்டன் நீதிமன்றம் தீர்ப்பு அளித்து இருப்பது பாகிஸ்தான் கிரிக்கெட் மீதான மதிப்பை மோசமாகப் பாதிக்கும். இது மிகவும் வருந்ததக்க சம்பவமாகும். சூதாட்டத்தில் சிக்கிய வீரர்களின் குடும்பத்தினருக்காக மிகவும் வருத்தப்படுகிறேன். குறிப்பாக அவர்களது பெற்றோர் மற்றும் மனைவிகளுக்காக வருந்துகிறேன். ஏனெனில் இந்த மோசமான கறை வாழ்வில் நிலைத்து நிற்கும். ஒரு போதும் அவர்களை விட்டு போகாது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மீண்டும் அணியில் அப்ரிடி

(கராச்சி)

இலங்கை அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் அணியில் முன்னாள் கப்டன் அப்ரிடி இடம்பிடித்துள்ளார்.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 5 ஒரு நாள் போட்டி மற்றும் ஒரு 20 ஓவர் போட்டி இடம்பெறவுள்ளது.

இதற்கான பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முன்னாள் தலைவர் இஜாஸ்பட்டுடன் மோதலால் கிரிக்கெட்டில் இருந்து தற்காலிகமாக ஓய்வு பெற்ற முன்னாள் கப்டன் அப்ரிடி, சமீபத்தில் பாகிஸ்தான் அணிக்காக மறுபடியும் விளையாட தயாராக இருப்பதாக அறிவித்தார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை புதிய தலைவர் அஷ்ரப்பையும் சந்தித்து பேசினார். இதன் தொடர்ச்சியாக இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான பாகிஸ்தான் அணியில் 31 வயதான அப்ரிடி சேர்க்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணி வருமாறு:- மிஸ்பா உல்-ஹக் (கப்டன்), அப்ரிடி, முகமது ஹபீஸ், இம்ரான் பர்கத், யுனிஸ்கான், உமர் அக்மல், மலிக், சர்பாஸ் அகமது, சயீத் அஜ்மல், அப்துல் ரஹ்மான், உமர்குல், அய்ஸாஸ் சீமா, ஜுனைட் கான், சோகைல் தன்விர், அப்துல் ரசாக், ஆசாத் ஷபிக்.

## பாக். ஒரு நாள் தொடர் டில்ஹாரவுக்கு வாய்ப்பு



(கொழும்பு)

பாகிஸ்தான் அணியுடனான ஒருநாள் சுற்றுப்போட்டிக்கான இலங்கை அணியில் வேகப்பந்துவீச்சாளர் டில்கார பெர்னாண்டோ சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்காக 15 பேர் கொண்ட இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

32 வயதான தில்ஹார இறுதியாக கடந்த பெப்ரவரி மாதம் மேற்கிந்திய அணிக்கெதிராக விளையாடினார். உலகக கிண்ணப் போட்டிகளுக்கான குழாமில் தில்ஹார இடம்பெற்றிருந்த போதிலும் எந்தவொரு போட்டியிலும் அவர் விளையாடவில்லை. அதன்பின் இங்கிலாந்து மற்றும் அவுஸ்ரேலிய அணிகளுக்கெதிரான போட்டிகளிலும் அவர் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அணி விபரம்:-

டில்சான் (தலைவர்), உபுல் தரங்க, மஹேல ஜயவர்தன, குமார் சங்கக்கார, அஞ்சலோ மத்தியூஸ் (உப தலைவர்), டினேஷ் சந்திமால், ஜீவன்மெண்டிஸ், குலேசேகர, லசித் மலிங்க, சுரங்க லக்மால், தம்பிக்க பிரசாத், சிகுகே பிரசன்ன, திமுத் கருணாரத்ன, டில்ஹார பெர்னாண்டோ, சுராஜ் ரந்தீவ்.

## லண்டனில் பதக்கம் வெல்ல முடிந்தவரை முயற்சிப்பேன்

(புதுடில்லி)



பீஜிங் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றதன்மூலம், அடுத்த ஆண்டு லண்டனில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியிலும் பதக்கம் வெல்வேன் என்ற எதிர்பார்ப்பு என் மீது அதிகம் ஏற்பட்டுள்ளது. இதனை எப்படி நிறைவேற்றப் போகிறேன் எனத் தெரியவில்லை. என்னால் முடிந்த வரை சிறப்பாகச் செயறபட்டு, ஒலிம்பிக்கில் மீண்டும் ஒரு பதக்கம் வெல்ல போராடுவேன். இவ்வாறு அபினவ் பிந்த்ரா தெரிவித்துள்ளார்.

இது எளிதான காரியமல்ல. இதற்காக கடுமையாக போராட வேண்டும். விரைவில் சிறப்புப் பயிற்சி மேற்கொள்ள திட்டமிட்டுள்ளேன்.

சமீபகாலமாக துப்பாக்கி சுடுதலில் இந்திய நட்சத்திரங்கள் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். இந்தியாவுக்கு நிறைய பதக்கங்களைப் பெற்றுத் தந்துள்ளனர். தற்போது லண்டன் ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள அனைத்து இந்திய வீரர்களுக்கும், பதக்கம் வெல்லும் தகுதி அதிகம் உள்ளது. இம்முறை துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு அதிக பதக்கம் கிடைக்கும். அதில் நானும் அடங்கும் வகையில் பதக்கம் பெற்றுக்கொடுக்கவே விரும்புகின்றேன். அதற்கான கடுமையான உழைப்பு அவசியம். முடிந்த வரை முயற்சிப்பேன் என எதிர்பார்க்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிறைவேற்றப்பட்டது தண்டனை

(லண்டன்)

கடந்த வருடம் நடைபெற்ற இங்கிலாந்து பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிகெட் போட்டியில் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்ட பாகிஸ்தான் வீரர்களுக்கு நேற்று லண்டன் சவுத் கிரவுன் வோர்க் நீதிமன்றில் தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் சல்மான் பட்டுக்கு 30 மாத சிறைத் தண்டணையும், வேகப்பந்து வீச்சாளர் முஹமட் ஆசிப்பிற்கு ஒருவருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது

அத்துடன் வேகப் பந்து வீச்சாளர் மொஹமட் அமருக்கு ஆறு மாத கால சிறைத் தண்டணையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆட்ட நிர்ணய சதியில் தரகராக செயற்பட்ட மசார் மஜீட் என்பவருக்கு இரண்டு வருடங்களும், எட்டு மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

## வாழ்நாள் தடை விதித்திருக்கவேண்டும்

(லாகூர்)

ஆட்டநிர்ணய குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட மூன்று பாகிஸ்தான் வீரர்களுக்கும் வாழ்நாள் போட்டித் தடை விதிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி மீண்டும் விளையாடக் கூடாதென பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ரமீஷ் ராஜா குறிப்பிட்டுள்ளார்.

ஏமாற்றியமை, மோசடிப் பணத்தினை ஏற்றுக் கொண்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் சல்மான் பட், மொஹமட் ஆசிப் மற்றும் மொஹமட் அமிர் ஆகியோர் குற்றவாளிகளாக காணப்பட்டனர்.

2010 ஆம் ஆண்டு லோட்சில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போதே இவர்கள் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினர் பராமரிப்பில்


(கொழும்பு)

இலங்கையின் மூன்று பிரதான கிரிக்கெட் அரங்குகள் பாதுகாப்புப் படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இம்மூன்று அரங்குகளையும் 01.11.2011 ஆம் திகதியுடன் பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்குமாறு அமைச்சு மட்டத்திலான பணிப்புரையொன்று விடுக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட்டின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறினார்.

இதனால் இவ்வரங்குகளை பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைப்பதைத் தவிர இலங்கை கிரிக்கெட்டுக்கு வேறு வழியிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளுக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பல்லேகல மற்றும் சூரியவெளி சர்வதேச கிரிக்கெட் அரங்குகள் முறையே கடற்படை மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. புனரமைக்கப்பட்ட ஆர்.பிரேமதாஸ அரங்கு விமானப்படையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.




பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்ட மேற்கிந்தியத்தீவுகள் அணியினர் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதைக் காணலாம். இப்போட்டித் தொடரில் வெற்றிபெற்றமை குறித்து மேற்கிந்தியத்தீவு அணித் தலைவர் டரன் சமி குறிப்பிடும்போது, வீரர்களின் சிறப்பான ஒருங்கிணைந்த ஆட்டத்திறன் மூலம் பங்களாதேஷ் அணிக்கெதிரான தொடரை இலகுவாக வெல்ல முடிந்தது. இதேபோன்று இந்திய அணிக்கெதிரான தொடரிலும் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி தொடரை சமப்படுத்தப் போராடுவோம் என்று குறிப்பிட்டார்.

## மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஸ்திரமான நிலை



இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் சார்ஜாவில் நேற்று ஆரம்பமான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி நேற்றைய ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. இதன்படி, பரணவிதான, டில்ஷான் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். எனினும் அணி 4 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, பரணவிதான 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் டில்ஷானுடன், சங்ககார இணைந்தார். இந்த ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது. இந்த நிலையில் இந்த ஜோடியின் இணைப்பாட்டம் 177 ஆக இருக்கையில் டில்ஷான் 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் சங்ககாரவுடன் ஜெயவர்த்தன ஜோடி சேர்ந்து சிறப்பாக ஆடி வந்தவேளை போதிய வெளிச்சமின்றி முதல்நாள் ஆட்டம் 86 ஓவர்களில் நிறைவுக்கு வந்தது. இதன்போது சங்ககார 112, மஹேல 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர். சங்ககார நேற்றுடன் தனது 27ஆவது சதத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.


பந்துவீச்சில் உமர்குல், அஜ்மல் இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

# யுனெஸ்கோவில் பலஸ்தீனம் வரவேற்கிறது இலங்கை

(கொழும்பு)

யுனெஸ்கோ அமைப்பில் பாலஸ்தீனம் உறுப்பு நாடாக தெரிவுசெய்யப்பட்டமைக்கு இலங்கை வரவேற்பை வெளியிட்டுள்ளது. கடந்த 29 ஆம் திகதி பாலஸ்தீனம் யுனெஸ்கோவில் அங்கத்துவநாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.இதனை ஏனைய நாடுகள் அங்கீகரித்துள்ள போதும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் எதிர்த்துள்ளன.

இதனையடுத்து அமெரிக்கா யுனெஸ்கோவுக்கு வழங்கிவரும் பலமில்லியன் டொலர்களை நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளது. இந்தநிலையில் இலங்கை பாலஸ்தீனம் யுனெஸ்கோவில் உறுப்பு நாடாக தெரிவுசெய்யப்பட்டமையை வரவேற்றுள்ள இலங்கை, இதன்மூலம் பாலஸ்தீனம் கல்வி வளர்ச்சியை பெற்றுக்கொள்ள முடியும் என்று குறிப்பிட்டுள்ளது.



# கொழும்பில் விநியோகம் ஸ்தம்பிதம் போதைவஸ்து பிரியர்கள் தற்கொலை

## பொலிஸார் தரும் திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

கொழும்பில் போதைப் பொருள் விநியோகம் ஸ்தம்பிதம் அடைந்தமையால் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் மூவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் அனைத்துப் போதைப்பொருட்களுக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அவற்றின் விலைகள் எக்கச்சக்கமாக உயர்ந்துள்ளன எனத் தெரியவருகின்றது.

இவற்றுக்கு அடிமையானவர்கள் அதனை அதிக விலைகொடுத்து வாங்கமுடியாது திண்டாடுகின்றனர் எனவும் சிலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏழுநாட்களில் கல்கிஸை, இரத்மலானை, பாணந்துறை ஆகிய பிரதேசங்களில் ஒருவர் தூக்குமாட்டியும், இருவர் ரயில் முன் பாய்ந்தும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.போதைப் பொருள் கிடைக்காதவர்கள் போதைதரும் மாத்திரைகளையும், திரவ மருந்துகளையும் வாங்குவதால் அவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன. கஞ்சாவின் விலையும் கூடியுள்ளது.

தெஹிவளை, கல்கிஸை, இரத்மலானை, மொரட்டுவ, பாணந்துறை, வெல்லம்பிட்டிய, இராஜகிரிய, கொலன்னாவ பகுதிகளுக்கு மொத்தமாக போதைப்பொருட்களை விநியோகம் செய்யும் கும்பல் செயலிழந்து போயுள்ளதாலேயே இத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வில் போட்டி



## களம் இறங்குகிறது ரஷ்ய நிறுவனம்

(மன்னார்)

மன்னார் வளை குடாவில் எண்ணெய அகழ்வுப்பணியை மேற்கொள்வதற்கு ரஷ்ய நிறுவனம் ஒன்று தயாராகி வருகிறது. மன்னார் கடற்படுக்கையில் எண்ணெய் அகழ்வில் ஈடுபட உலகின் முன்னணி எண்ணெய் நிறுவனங்களில் ஒன்றான ரஷ்யாவின் கஸ்பரோம் நிறுவனம் போட்டி போட்டுக் கொண்டு முன் வந்துள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிறேம்ஜெயந்த தகவல் வெளியிட்டுள்ளார். இதுதொடர்பான ஆய்வுகளுக்காக கஸ்பரோம் நிறுவனத்தின் தொழில்நுட்ப நிபுணர்கள் குழுவொன்று விரைவில் கொழும்பு வரவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மன்னாரில் எரிவாயு உற்பத்தியில் கூட்டாக இணைந்து செயற்பட கஸ்பரோம் நிறுவனம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் விருப்பம் வெளியிட்டிருந்தது. கடந்த ஓகஸ்ட் மாதம் கொழும்பு வந்த கஸ்பரோம் நிறுவனத்தின் தொழில்நுட்பக் குழுவினர் அரசாங்க உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தனர்.

இந்தநிலையிலேயே மேலதிக நடவடிக்கைகள் குறித்த ஆய்வு செய்ய ரஷ்யாவில் இருந்து தொழில்நுட்ப நிபுணர்கள் குழுவொன்று விரைவில் கொழும்பு வரவுள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. மொஸ்கோவில் உள்ள சங்காய் கூட்டுத்தாபன அமைப்பில் கடந்தவாரம் பங்கேற்ற இலங்கை பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிறேம்ஜெயந்த கஸ்பரோம் நிறுவன பிரதிநிதிகளுடன் இதுதொடர்பாகப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

மன்னார் கடற்படுக்கையில் எண்ணெய் வளம் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ள எட்டுத் துண்டங்களில் ஒன்றில் கெய்ன் இந்தியா நிறுவனம் இரண்டு எண்ணெய்க் கிணறுகளை துளையிட்டு வருகிறது.

மேலும் இரு துண்டங்கள் சீனா மற்றும் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏனைய துண்டங்களில் எண்ணெய் அகழ்வில் ஈடுபடு வதற்கு ரஸ்யாவின் கஸ்பரோம் நிறுவனமும், வியட்னாமின் பெற்றோவியட்னாம் நிறுவனமும் விருப்பம் வெளியிட்டுள்ளன.

# நுளம்புப் பெருக்கம் அபராதம் விதிப்பு



டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்ததாக நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்ட பொறியியல் செயற்பாடுகளுக்கான மத்திய ஆலோசனை பணியக வேலைத்தள பரிசோதகர் ஒருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் மேலதிக நீதவான் சந்திக எதிரி மான்ன முன்னிலையில் சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அத்துடன் அரசாங்க கட்டணமாக பத்தாயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# முப்பது வீதமானோருக்கு மனநலம் பாதிக்கப்பட்டுள்ளது

## மருத்துவர்கள் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

நாட்டில் 30 வீதமானோர் மனநலப் பாதிப்பு நிலைக்கு உள்ளாகியிருப்பதாக தெரியவந்துள்ளது.

இவர்களில் இரண்டு வீதமானோர் கடும் மனநலப் பாதிப்புக்கு இலக்காகியிருப்பதாக அங்கொடை மன நல சுகாதார ஆய்வு நிறுவனத்தின் தலைவர் டொக்டர் ஜயன் மெண்டிஸ் குறிப்பிட்டார். இதுதவிர மேலும் 10 வீதமானோர் ஓரளவு மனநலப் பாதிப்புக்கு இலக்காகியுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் அச்சம், மன அழுத்தம் ஆகியவற்றினால் பீடிக்கப்பட்ட சுமார் 10 வீதமானோர் நாட்டில் இருப்பதாக டொக்டர் ஜயன் மெண்டிஸ் மேலும் சுட்டிக்காட்டினார்.



# எண்ணெய் அகழ்வுத் தொழில்நுட்பம் இலங்கையின் பட்டதாரிகளுக்கு வாய்ப்பு

## ரஷ்யா புலமைப்பரிசில் வழங்கும்

(கொழும்பு)

இலங்கையின் பட்டதாரிகளுக்கு எண்ணெய் அகழ்வுத்துறையில் தொழில்நுட்ப பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வாரம் ரஷ்யாவுக்கு விஜயம் செய்த பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த மேற்படி விடயம் குறித்து முக்கிய பேச்சுக்களில் ஈடுபட்டார்.

ரஷ்ய எண்ணெய்அகழ்வு நிறுவனமான "கஸ்பரோம்" என்ற நிறுவனம் மேற்படி தொழில் நுட்ப பயிற்சிகளை வழங்குவதற்கு முன்வந்திருக்கிறது.

அத்துடன் இலங்கையின் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் மேற்படி கற்கை தொடர்பான விசேட புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை வழங்குவதற்கும் மேற்படி நிறுவனம் முன்வந்துள்ளது.



புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஜப்பனிய தூதுவர் நொபுஹிடோ ஹுபோ காலை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை அவரது கௌரவ அழைப்பின் பேரில் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் சந்தித்தார்.இச் சந்திப்பில், இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகள் குறித்து ஆராயப்பட்டது.

# புதிய வகையான பெற்றோல் அறிமுகம்



இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனமான லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் 'யூரோ த்ரி' எனப்படும் புதிய வகை பெற்றோலை இலங்கையின் சந்தையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது.லங்கா ஐ.ஓ.சி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பனவே நாட்டில் பிரதான எரிபொருள் விநியோகத்தர்களாக செயற்பட்டு வருகின்றன.மோட்டார்கள், கார்கள், விளையாட்டுப் பயன்பாட்டு வாகனங்கள் அதிக அளவில் தற்போது பாவனையில் உள்ளன.அவற்றுக்கான உயர்தரப் பெற்றோல் சந்தையில் உள்ளது.

சாதாரண வகையான ஒக்டேன் 90 மற்றும் உயர்தர வகையான ஒக்டேன் 95 என்பன தற்போது புழக்கத்தில் உள்ளன.இருந்த போதும், யூரோ த்ரி எனப்படும் புதிய ரக உயர்தர பெற்றோலை அவற்றுக்கு மாற்றீடாக சந்தையில் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கே.ஆர்.சுரேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் மூன்று மாதங்களில் 'யூரோ 5' என்ற புதிய வகை பெற்றோலையும் சந்தையில் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.


# முறைப்பாடு செய்யலாம்



(கொழும்பு)


மிருகக்காட்சிச் சாலையில் விலங்குகளை பார்வையிடச் செல்பவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்த முறைப்பாடுகளை முன்வைக்க தேசிய மிருகக்காட்சிச் சாலைகள் திணைக்களம் புதிய தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. முறைப்பாடுகளை 112712812 என்ற இலக்கத்தின் ஊடாக முன்வைக்க முடியும் என திணைக்களத்தின் பணிப்பாளர் ஹாஷ்வர சேனாங்க குணரத்ன குறிப்பிட்டார். அதன் பிரகாரம் தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை மற்றும் பின்னவலை யானைகள் சரணாலயம் ஆகியன தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என பணிப்பாளர் கூறினார்.

27.




உருவின் பரப்பளவு யாது?

28.




உருவில் X இன் பெறுமானத்தைக் காண்க.


29. அடைப்பு நீக்கிச் சுருக்குக. $3(x - 2y) -5 (2y - x)$

30. $x + y = 6, xy = -3$ எனின் $x^2 + y^2$ இன் பெறுமானம் காண்க.

31. காரணிப்படுத்துக. $2x^3 - 54$

32. 2 இற்கும் 162 இற்கும் இடையே 3 பெருக்கல் இடைகளைக் காண்க.


33.




இணைகரம் ABCD இல் DC = 16 cm, CB = 8 cm, AF = 12 cm, AE = h எனின் h ஐக் கணிக்க.


34. $T = a + (n-1) d$ இல் n ஐ எழுவாயாக்குக.

35.




உருவில் X ஐக் காண்க. பயன்படுத்திய தோற்றம் யாது?

36.




உருவில் தரவுகளைப் பயன்படுத்தி X இன் பெறுமானத்தைக் காண்க.

37. A,B இரு நிலைத்த புள்ளிகள் $A\hat{C}B = 90°$ (மாறிலி) ஆக C அசைகிறது. C இன் ஒழுக்கை விபரிக்குக.



# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 1 மணி

பிரபல ஆசிரியர்


# கல்வி முரசு

## கணிதம் -I பகுதி A

**யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

**தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**


01. வகுப்பு ஒன்றில் 30 மாணவர்கள் கணித பாடத்திற்குப் பெற்ற புள்ளிகளை இங்கு காட்டப்பட்டுள்ளது. இவ் வலையுரு வரையத்திற்கு ஏற்ப,




1) அதிக எண்ணிக்கையான மாணவர்கள் புள்ளிகளைப் பெற்றுள்ள வகுப்பாயிடை யாது?
2) 30 இற்கும் 50 இற்கும் இடையே புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை யாது?
3) ஆகார வகுப்பு யாது?
4) 20 இலும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர் எண்ணிக்கை யாது?

02. ஒருவர் 45000/= பெறுமதியுள்ள கணினி ஒன்றை வாடகைக் கொள்வனவு முறையில் வாங்க முடியும். 20 வீத ஆண்டு வட்டி அறவிடும் அதேவேளை, 24 சம மாத தவணைக் கட்டணங்களில் கொடுத்து முடித்தல் வேண்டும்.
1) ஒரு மாதம் கொடுக்க வேண்டிய முதலின் பகுதி யாது?
2) அத்தொகைக்காக ஒரு மாதம் கொடுக்க வேண்டிய வட்டி எவ்வளவு?
3) மாத அலகுகள் எத்தனை?
4) கொடுக்க வேண்டிய மொத்த வட்டி யாது?
5) செலுத்த வேண்டிய தவணைக் கட்டணத்தைக் காண்க.

03. வில்லுருவான யன்னல் ஒன்று 80cm உயரத்தையும், 42cm அகலத்தையும் உடைய செவ்வகப் பகுதியையும் 42 cm விட்டமுள்ள இரு அரைவட்டப் பகுதியையும் கொண்டுள்ளது.




1) வில்லுடன் யன்னலின் மொத்த உயரம் யாது?
2) அரைவட்டப் பகுதி ஒன்றின் பரப்பளவைக் காண்க.
3) யன்னலின் மொத்தப் பரப்பு யாது?
4) யன்னலின் சுற்றளவைக் காண்க.

04. விளையாட்டுக் கழகம் ஒன்றின் 100 மல்யுத்த வீரர்களின் நிறைகள் எடுக்கப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டன.


| நிறைய (kg இல்) | 22 - 38 | 38 - 46 | 46 - 54 | 54 - 62 | 62 - 70 | 70 - 94 |
|---|---|---|---|---|---|---|
| மீடிறன் (மல்யுத்த வீரர்களின் எண்ணிக்கை) | 16 | 20 | 30 | 09 | 10 | 15 |

1) இப்பரம்பலை வகைப் குறிப்பதற்கு வலையுரு வரையம் வரைக.

2) இதிலிருந்து மீடிறன் பல்கோணி வரைக.


05. கனவடிவான கறுப்புத் தாயக்கட்டை ஒன்றும் கனவடிவ வெள்ளைத் தாயக்கட்டை ஒன்றும் ஒருமித்து உருட்டப்படுகின்றன. எதிர்முகச்சோடிகள் 1, 2, 3 எனக் குறிக்கப்பட்டுள்ளன.
1) தாயக்கட்டைகள் உருட்டப்படும்போது பெறப்படும் இலக்கங்களின் கூட்டுத்தொகையைக் காட்டும் மாதிரி வெளியைத் தெக்காட்டுத் தளத்தில் வகைக் குறிக்க.
2) இலக்கங்களின் கூட்டுத்தொகை 4 ஆக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
3) இலக்கங்களின் கூட்டுத்தொகை ஓர் இரட்டை எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

06. அலுமாரி ஒன்றைச் செய்வதற்கு ரூபா 35,000 செலவாகியது. அதற்குத் தேவையான மூலப்பொருள்களின் விலைக்கும், கூலிக்கும் இடையே உள்ள விகிதம் 3:4 ஆகும். மூலப்பொருள்களின் விலை விகிதம் 3:2 இல் அதிகரித்து கூலி விகிதம் 4:5 இல் குறைந்தது எனின்,
1) ஆரம்பத்தில் மூலப்பொருளின் செலவைக் காண்க.
2) ஆரம்பத்தில் கூலிச் செலவைக் காண்க.
3) புதிய மூலப்பொருள் செலவு யாது?
4) புதிய கூலிச் செலவு யாது?
5) அத்தகைய அலுமாரி ஒன்றைச் செய்ய செலவாகும் பணத்தைக் காண்க.

07. 

தரப்பட்டுள்ள வரைபடத்தில் ABC என்பது CA = CB = 30 cm $\hat{C} = 90^\circ$ ஆன ஒரு செங்கோண, இருசமபக்க முக்கோண உலோகத்தகடாகும். C எனும் மையத்தையும் 7 cm ஆரையும் கொண்ட ஓர் ஆரைச்சிறை CMN (நிழற்றப்பட்ட பகுதி) இத்தகட்டிலிருந்து வெட்டியெடுக்கப்படுகிறது.
1) தகடு ABC யின் பரப்பளவைக் காண்க.
2) அகற்றப்பட்ட ஆரைச்சிறை CMN, 7cm ஆரையைக் கொண்ட வட்டத்தின் எப்பின்னமாக அமையும்?
3) ஆரைச்சிறை CMN இன் பரப்பு யாது?
4) எஞ்சிய பகுதி ABNM இன் பரப்பு யாது?
5) முக்கோணத் தகடு ABC 3 cm ஒரு சீரான தடிப்பத்தைக் கொண்டுள்ளதாயின் இத்திண்மத்தை இனங்காண்க.


08. x, y, z ஆகிய தொடைகளைக் கொண்ட அகிலத் தொடையிலுள்ள 47 மூலகங்களும் தரப்பட்ட வென்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு பரம்பியுள்ளன. இதனைப் பயன்படுத்தி,





1) $n(x \cap y \cap z)$ ஐக் காண்க.
2) $x' \cap z$ என்பதனை வகைக் குறிக்கும் பிரதேசத்தை நிழற்றிக் காட்டுக.
3) $n(x \cap z)$ஐக் காண்க.
4) தொடை x இற்கும் y இற்கும் இடையிலுள்ள தொடர்பை தொடைக் குறியீட்டில் தருக.
5) $x \cap y$ இற்குச் சமனான தொடையை எழுதுக.

09. ஒருவன் ரூபா 6 ஆகவுள்ள ஐந்து ரூபாய் பங்குகளில் ரூபா 7500 ஐ முதலீடு செய்தான். பங்கு இலாபமாக அவன் பெற்ற பணம் அவனது முதலீட்டின் 13 1/3% ஆகும்.
1) அவன் பெற்ற பங்குகளின் எண்ணிக்கை யாது?
2) அவன் பெற்ற பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?
3) அவன் பெற்ற பங்கிலாபம் என்ன?
4) ஐந்து ரூபாய் பங்குகள் தரும் பங்கிலாப நூற்று வீதம் என்ன?

10. உருவில் 50 cm X 30 cm அளவுடைய செவ்வகத் தட்டு ஒன்றிலிருந்து 7cm விட்டமுடைய இரு வட்டத் தகட்டுக்கள் வெட்டி அகற்றப்பட்டுள்ளது.
1) செவ்வகத் தகட்டின் பரப்பளவைக் காண்க.
2) அகற்றப்பட்ட ஒரு வட்டத்தகட்டின் பரப்பளவைக் காண்க.
3) எஞ்சிய நிழற்றிய தகட்டின் பரப்பளவைக் காண்க.
4) இக்குறுக்கு வெட்டுடைய ஓர் திண்ம வளை 8m நீளமானது எனின், வளையின் கொங்கிறீட்டின் கனவளவைக் காண்க. ($m^3$இல் தருக)






11. 

வருமானம் ரூபாவில்

கிராமம் ஒன்றிலுள்ளவர்களின் குறிப்பிட்ட நாளொன்றில் பெற்ற வருமானத்தை அருகிலுள்ள திரள் மீடிறன் வளையி காட்டுகின்றது.
1) இப்பரம்பலின் இடையம் யாது?
2) முதலாம் காலணையைக் காண்க.
3) மூன்றாம் காலணையைக் காண்க.
4) காலணை இடைவீச்சு யாது?
5) ரூபா 60 இலும் கூடிய வருமானத்தைப் பெறுவோர் முழுத்தொகையின் என்ன சதவீதம்?

12. ஒவ்வொன்றும் 35 ரூபா விலையுள்ள எத்தனை பேனைகளை 210 ரூபாவுக்கு வாங்க முடியும்?


13. $\sqrt{361}$ இன் பெறுமானம் யாது?

14. தீர்க்க. x/3 = 2/3

15. சுருக்குக. 0.125 X 100

16. 1.275 kg ஐ g இல் தருக.

17. X = {1, 3, 6, 10, 15} எனின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான குறியீட்டைத் தருக.
{1, 6, 15} ---------X

18. 

உருவில் $X^\circ$ ஐக் காண்க.

19. log உருவில் தருக. $3^x = 81$

20. சுருக்குக. -2 + 1 1/2

21. வட்டம் ஒன்றின் விட்டம் 15 சென்ரிமீற்றர் எனின் ஆரை யாது?

22. 24, 18, 30 இன் பொ.ம.சி காண்க.

23. சுருக்குக. $\frac{x^2 - 6x + 9}{3x - 9}$


24. சுருக்குக. $[81/16]^{-1/4}$

25. x = -2 எனின் $5 - x^3$ இன் பெறுமானம் காண்க.

26. 2y -6x =8 என்னும் நேர்கோட்டின் படித்திறன் வெட்டுத்துண்டு காண்க.



**1835** ஆம் ஆண்டு ஃப்ளோரிடா மாகாணத்தில் ஒரு வால்நட்சத்திரம் தோன்றியது. மறுபடியும் அந்த ஹேலியின் வால்நட்சத்திரம் 1910 ஆம் ஆண்டு தோன்றி மறைந்தது. அதிசயம் இதுவல்ல. முதல் வால்நட்சத்திரம் தோனறி மறைந்த அதேஆண்டில் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து இரண்டாவது வால் நட்சத்திரம் தோன்றி மறைந்த அதே ஆண்டு மறைந்தது ஒரு மூன்றாவது "வால்" நட்சத்திரம். அந்த நட்சத்திரம் மார்க் ட்வெய்ன் என்று அறியப்பட்ட எழுத்தாள மேதை.



1835 இல் பிறந்து 75 ஆண்டுகள் வாழ்ந்த மார்க் ட்வெய்ன் 11 நாவல்கள், 7 சிறுகதைத் தொகுப்புகள், பத்துக்கும் மேற பட்ட தத்துவம் மற்றும் பலதரப் பட்ட படைப்புகள், ஒரு முடிவுறாத சுயசரிதம் ஆகியவற்றை அமெரிக்க இலக்கியத்திற்கு அளித்துள்ளார்.

"என்னைப் பற்றிய இரங்கல் செய்திகள் யாவும் மிகைப்

# மார்க் ட்வெய்ன்

படுத்தப்பட்டவையே" என்று அவர் இறப்பதற்கு 13 ஆண்டுகளுக்கு முன்பே அவருடைய விமர்சனத்தை நியூயோர்க் பத்திரிகை ஒன்றில் எழுதினார்.

அவரது நகைச்சுவை நுட்பமானது, அழகானது. சில உதாரணங்கள்:

"என் கல்வியில் தலையிடும் உரிமையை என் பள்ளிக் கூடத்துக்கு நான் கொடுத்ததே இல்லை."

"இறையருளால் நமது நாட்டில் நாம் மூன்று அரிய விஷயங்களை வைத்திருக்கிறோம். பேச்சு சுதந்திரம், மனசாட்சிப்படி நடக்கும் சுதந்திரம், இந்த இரண்டையும் பயன்படுத்தக்கூடாது என்ற ஞானம்."


"எல்லா மிருகங்களிலும் மோசமான மிருகம் மனிதன் தான். இன்பம் பெறுவதற்காக துன்பம் கொடுக்கும் மிருகம் வேறு எதுவுமில்லை."

"நான் இலக்கியத்துறையில் இருப்பதற்கு உண்மையான காரணம், பன்னிரண்டு வயதில் எனக்கு சின்னம்மை வந்ததுதான்."

மார்க் ட்வெய்ன் ஒரு தீவிர சுருட்டு புகைப் பாளர். சங்கிலித் தொடராகப் புகைப்பவர். எப்போதுமே குடிப் பீர்களா என்று கேட்டதற்கு, "இல்லையே தூங்கும்போது குடிப்பதில்லை" என்றார். சுருட்டு பிடிக்கும் பழக்கத்தை நிறுத்துவது கஷ்டமா என்றதற்கு, "சேச்சே, ஈஸி, நான் எத்தனையோ முறை நிறுத்தியிருக்கிறேன்" என்றார்.

"உண்மையைச் சொல்வதற்கு எதையுமே ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை" என்று சொன்ன மார்க் ட்வெய்னை இலக்கிய ஆர்வலர்கள் எவரும் மறக்க மாட்டார்கள்.

# எந்திரன் எழுதும் புத்தகம்!





**ஆ**மாம், ரோபோட்கள் புத்தகங்கள் எழுதுகின்றன. எப்படிப்பட்ட புத்தகங்கள்? ஒரு புத்தகத்தின் தலைப்பு இது என்று ஒரு எழுத்தாளர் சொல்கிறார், அது என்னவென்று பாருங்கள். "Storage Ring: Particle Accelerator, Particle Beam, Accelerator Physics, Beamline, Australian Synchrotron, Cyclotron, Dipole Magnet, Electromagnetism." இது ஒரு பட்டியலா, புத்தகத் தலைப்பா? தலைப்பு தான் என்கிறார் பாகன் கெனடி என்னும் இந்த எழுத்தாளர்.

மொரிஷியஸ் தீவுகளில் இருக்கிறதாம் இந்தப் பதிப்பகம். பல பத்து பதிப்பாசிரியர்கள் தொகுக்கும் புத்தகங்கள் இவை என்கிறார் புத்தக முதலாளி. இயந்திரங்கள் புத்தகம் எழுதுவதைக் கெனடி கிண்டல் செய்கிறார். இவை எல்லாம் விக்கியில் கிட்டும் தகவல்களை வைத்துச் சும்மா தலைப்புக்கேற்பத் தொகுக்கப்படும் தகவல் திரட்டுப் புத்தகங்களே, இவற்றை சுய புத்தியுள்ள எவரும் எழுத மாட்டார், வாங்கிப் படிக்கவும் மாட்டார் என்கிறார் கென்னடி.

தமிழில் 50களிலேயே இந்த வகைத் தொகுப்பு வேலைகள் தொடங்கியாயிற்று. சிரஞ்சீவி என்பவர் எழுதிய "பறக்கும் தட்டு" என்ற புத்தகம் இவ்வகைத் தொகுப்புத்தான். கலைக்கதிர் என்ற ஒரு பத்திரிகை இபபடி அறிவியல், பொறியியல் தகவல்களைத் தொகுத்துக் கொடுத்த சஞ்சிகை. மஞ்சரி என்ற ஒரு சஞ்சிகை, ஆங்கில digest பாதிப் பல் வெளிவந்தது. கலை மகள் பிரசுர நிலையத் தின் வெளியீடு, வெகு காலம் கலை, இலக்கியம், தவிர சில அறிவி யல் தகவல்கள் எல்லாம் உலகச் செய்தித் தாள்களில் இருந்து பொறுக்கி எடுத்து மாதா மாதம் தொகுத்துக் கொடுத்தது. நிறைய மேலை இலக்கியத்தின் மொழி பெயர்ப்புகள், இந்திய மொழிகளில் இருந்தும் மொழிபெயர்ப் புக் கதைகள் இந்த சஞ்சிகையில் வெளியாயின. ஆனால் இவை எல்லாம், மனித பதிப்பாசிரியர்கள், கட்டுரையாளர்களால் எழுதப்பட்டவை. இன்று 21 ஆம் நூற்றாண்டின் பழக்கத்துக்கு ஏற்றாற்போல எந்திரங்கள் தொகுக்கும் புத்தகங்கள் வந்துள்ளன.

# முன்னாள் சூப்பர் ஸ்டார் என்றாகி விட்டால்..



**த**மிழ் திரையுலகின், "முதல் சூப்பர் ஸ்டார்" என, வர்ணிக்கப்படும் எம்.கே. தியாகராஜ பாகவதர் நினைவு நாளை (நவம்பர் 01) அனுசரிக்க திரையுலகினர் யாரும் வராதது, அவரது குடும்பத்தாருக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

1910 மார்ச் 1 எம்.கே.ரி பிறந்தார். 5 ஆம் வகுப்பு வரையே படித்த அவர், சிறு வயதிலேயே நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். 1934 இல் பவளக்கொடி என்னும் திரைப்படம் மூலம் தமிழ் திரையுலகில் காலடி எடுத்து வைத்தார். நவீன சாரங்கதாரா, அம்பிகாபதி, திருநீலகண்டர், சிவகவி, ஹரிதாஸ், அசோக்குமார், ராஜமுக்தி உள்பட, 14 படங்களில் நடித்து பிரபலமானார்.

இன்றைய காலகட்டத்தில், ஒரு படம் 10 நாட்கள் தியேட்டரின் முழு கொள்ளளவுடன் ஓடினாலே வெற்றிப்படம் என கூறி வரும் நிலையில், தமிழ் திரையுலகின் முதல் சூப்பர் ஸ்டார் என்று வர்ணிக்கப்படும் தியாகராஜ பாகவதர் நடித்த, ஹரிதாஸ் என்ற படம் 4 தீபாவளிகளையும் தாண்டி தியேட்டர்களில் வெற்றிகரமாக ஓடி சாதனை படைத்தது. இதன் மூலம் புகழின் உச்சிக்கே சென்ற தியாகராஜ பாகவதர், உடல் நலக்குறைவால், 1959 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் திகதி இறந்தார்.

அவரது 53 ஆவது ஆண்டு நினைவு நாள் 01 ஆம் திகதி அனுசரிக்கப்பட்டது. தியாகராஜ பாகவதரின் சின்னம்மாவின் மகள், கணவர், இவர்களது மகன் தனபால் ஆகியோர் மட்டும் பாகவதர் கல்லறைக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர். 1948 ஆம் ஆண்டு வெளியான ராஜமுக்தியில் இடம்பெற்ற, "மானிட ஜென்மம் மீண்டும் வந்திடுமோ" என்ற பாடலை உரக்கப் பாடி அவரது கல்லறையில் அஞ்சலி செலுத்திவிட்டு வந்தனர் என்கிறது பத்திரிகைச் செய்தி.

தியாகராஜ பாகவதர் சூப்பர் ஸ்டாராக கொடிகட்டிப் பறந்த சமயம், அவர் போகுமிடமெல்லாம் அவரைப் பார்ப்பதற்காக மக்கள் தெருவெங்கும் காத்து நின்றார்கள். அவரது ஒரு தலைமுடியைப் பெற்றுவிடுவதற்காகவும், அவரது கையைத் தொட்டுப் பார்த்து விடவுமென பெண்களும் ஆண்களும் வரிசையில் அலைமோதி நின்றார்கள்.

தங்கத்தட்டில் உணவுண்டவர் அவர். இன்று அவரை மக்கள் மட்டுமல்ல திரையுலகமும் மறந்துவிட்டது.

# துயர் சொன்னால் வருமானமா?

**த**மிழ் மக்களைப் பிரதிநிதிப் படுத்தும் பாராளுமனறவாதிகள் ஏழைத் தமிழ் மக்களுக்கு என்ன செய்கிறார்கள்? வாழ்க்கை முழுதும் பாதுகாப்பானதும் வசதிகளும் நிறைந்ததுமான வாழ்க்கையில் உல்லாசம் காணும் பாராளுமன்றவாதிகள் தமிழ்ப்பகுதிகளில் அல்லறபடும் கிட்டத்தட்ட 89.000 விதவைகளின் விடிவுக்காக என்ன திட்டங்களை வைத்திருக்கிறார் கள்? ஆயிரக்கணக்கான அனாதைக்குழந்தைகளின் எதிர்கால விடிவுக்கு இவர்களின் செயற்பாடுகள் என்ன?



பாராளுமன்றவாதிகளுக்கு மக்க்ள் நலத்தை மேம்படுத்தும் கடமையிருக்கிறது. தம்மைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு இவர்கள் என்ன செய்து கொடுததார்கள்? கல்விநிலையங்களைக் கட்டினார்களா, கலாசார மண்டபங்களை உருவாக்கினார்களா? தொழில் வளர்சசிக்கான தொழிற் சாலைகளை உருவாக்கினார்களா? பெண்களின் முன்னேற்றத்துக்கான என்ன பணியைச் செய்தார்கள்? இளம் தலைமுறைக்கு என்ன செய்தார்கள்?

ஒரு பாராளுமன்றவாதி ஒருமாதம், தனது மக்களுக்கு எதுவும் செய்யாமலே பல்லாயிரம் ரூபாய்களை ஊதியமாகப் பெறுகிறார். எங்கள் பாராளுமன்றவாதிகள் தமிழரின் பெயரில் இதுவரை கோடானுகோடிகளை மக்களுக்கு எந்த உதவியும் செய்யாமலே பெற்றுக்கொண்ட அதிர்ஷ்டசாலிகள். இவரின் ஒட்டுமொத்த மாத வருமானம் கிட்டத்தட்ட:

மாத சம்பளம் ------------------42.000
அலுவலகம் ------------------14.000
கைச்செலவு ------------------10.000
பிரயாணச்செலவு ------------48.000

ஒரு தடவை பாராளுமன்றம் சென்றால்----500, கார் --இலவசம், அளவற்ற புகையிரதப் பிரயாணம் முதல் வகுப்பு --இலவசம் குடும்பத்துடன் விமானப் பிரயாணம் 40 தடவை? --இலவசம்! கொழும்பில் தங்க குவாட்டர்ஸ் --இலவசம், சொந்த வீட்டு மின்சாரம் 50,000 யுனிட்ஸ் இலவசம், ரெலிபோன்----17,000 இலவசம்.

பாராளுமன்றத்தில் ஆடு, மாடு, கோழி, இறால், நண்டு, கணவாய்ச் சாப்பாடு -150 ரூபா மட்டுமே. (இவை நம்பிக்கையாகக் கிடைத்த தகவல்களாகும்)

இதுவரையும் தமிழர்களின் துயர் சொல்லிக் கொண்டு பாராளுமன்றம் போகும் தமிழ்ப்பாராளுமன்றவாதிகள், இன்று துன்பத்தில் வாடும் ஏழைப் பெண்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் பிரயோசனமாக ஏதும் செய்வார்களா? அனாதைகளுக்கும், அங்கம் இழந்தவர்களுக்கும் ஏதும் உதவிகள் செய்வார்களா? இனஒற்றுமை, நாட்டின் ஒற்றுமை, பொருள் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி பற்றி ஒரு உருப்படியான திட்டத்தை முன்வைப்பார்களா?

- ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

# மஞ்சள் மகிமை



**நா**ம் சாதாரண பாவனையில் வைத்திருக்கும் பொருட்களையும் மேற்குலகினர் வியந்த பிறகு தான் அதை அறிவியலாக எடுத்துக் கொள்கிறோம். இப்போது மஞ்சள் தூளின் மகிமையை அமெரிக்க மருத்துவர்கள் புகழ்ந்துரைத் திருக்கிறார்கள்.

மஞ்சள் மட்டுமல்ல, மிளகுத் தூளையும் சேர்த்துப் போற்றுகிறார் சான்டோஸ் என்ற அமெரிக்க மருத்துவர். அது உடலுக்குள் வீக்கங்களைக் குறைத்து, வலியை நிவர்த்தி செய்கிறது, குறிப்பாக மூட்டு வலிகளுக்கு மஞ்சள் தூள் அசத்தலான மருந்து என்கிறார். நம்மவர்க்கு இது புதிதல்லவே! நோவுக்கு மஞ்சள் தூளை வைத்துக் கட்டுவதை முன்னெப்போதிருந்தோ செய்து வருகிறார்களே! இது எப்படி நம்ம வர்க்கு ஆயிரக்கணக்கான வருடங்களாகத் தெரிந்திருந்தது? அதை எப்படி இத்தனை நாட்களாக மேற்கத்தியர் கண்டு கொள்ளாமல் விட்டனர்? முன்னோர் தெரிந்து வைத்திருந்த அறிவியல் விஷயங்களை நாம் தொடர முடியாமல் போனது எப்படி? எங்கோ தப்பு நடந்திருக்கிறது நடந்து கொண்டிருக்கிறது என்றுதான் தோன்றுகிறது.

# கனிமொழியின் பிணைமனு நிராகரிப்பு தி.மு.க.முக்கியஸ்தர்கள் அதிர்ச்சி

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் கைதாகி சிறையில் உள்ள தி.மு.க. எம்.பி. கனிமொழியின் பிணைமனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இதனால் டில்லி சிறப்பு நீதிமன்றில் கூடியிருந்த டி.ஆர். பாலு உள்ளிட்ட தி.மு.க. தலைவர்கள் பெரும் அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்தனர்.

கனிமொழியின் பிணை மனு நேற்று விசாரணைக்கு வந்தது. இதையொட்டி அவர் நேற்றுக் காலை திகார் சிறையிலிருந்து டில்லி பாட்டியாலா சி.பி.ஐ. நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டார். கனிமொழியின் கணவர் அரவிந்தன், மகன் ஆதித்யா, தி.மு.க. எம்பிக்கள் டி.ஆர்.பாலு, திருச்சி சிவா ஆகியோரும் நீதிமன்றம் வந்தனர். இந்தத் தீர்ப்பையொட்டி தி.மு.க. மத்திய அமைச்சரான அழகிரி, கட்சியின் பொருளாளர் ஸ்டாலினும் டில்லி வந்தனர். மேலும் கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் டில்லியில் முகாமிட்டிருந்தனர்.

இந்தப்பிணை மனு கடைசியாக கடந்த மாதம் 24ஆம் திகதி டில்லி பாட்டியாலா சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, கனிமொழி, கலைஞர் தொலைக்காட்சி நிர்வாகி சரத்குமார் ரெட்டி, குசேகான புரூட்ஸ் அண்டு வெஜிடபிள்ஸ் நிறுவன நிர்வாக இயக்குனர்கள் ஆசிப் பல்வா, ராஜீவ் அகர்வால், சினியுக் பிலிம்ஸ் அதிபர் கரீம் மொரானி ஆகிய 5 பேருக்குப் பிணை வழங்குவதை எதிர்க்கவில்லை என்று சி.பி.ஐ. தெரிவித்தது.




இதையடுத்து இவர்களுக்கு பிணை கிடைக்கும் வாய்ப்புகள் பிரகாசமாகின. ஆனாலும் இந்த வழக்கில் தீர்ப்பை நேற்றைய தினத்துக்கு நீதிபதி ஒத்தி வைத்துவிட்டார்.

எனவே கனிமொழி நேற்று விடுதலை ஆகிவிடுவார் என்ற தி.மு.க. தரப்பு நம்பிக்கையுடன் இருந்தது. ஆனால் கனிமொழியின் பிணை மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

நேற்று கனிமொழி உள்ளிட்ட 8 பேரின் பிணை மனுக்களை சிறப்பு நீதிபதி ஷைனி விசாரித்தார். பின்னர் அனைத்துப் பிணை மனுக்களையும் தள்ளுபடி செய்வதாக அறிவித்த அவர் 2ஜி வழக்கின் விசாரணையை நவம்பர் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். நீதிபதியின் உத்தரவைக் கேட்டதும் நீதிமன்றில் கூடியிருந்த தி.மு.க.வினர் அனைவரும் பெரும் அதிர்ச்சியும், ஏமாற்றமும், விரக்தியும் அடைந்தனர்.

## டில்லியில் தாக்குதல் திட்டம்? நாடாளுமன்றுக்கு பாதுகாப்பு



(புதுடில்லி)

டில்லியில் மிகப்பெரிய தாக்குதல் திட்டத்துடன் பாகிஸ்தானில் இயங்கும் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது. மெட்ரோ ரயில் உட்பட மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பல இடங்களில் அவர்கள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இதனால் டில்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

டில்லியில் நாடாளுமன்றம் மீது கடந்த 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். அடுத்த மாதம் டிசம்பர் 13 ஆம் திகதி இந்தத் தாக்குதல் நடந்த 10 ஆவது ஆண்டாகும். எனவே அந்த நாளில் மீண்டும் ஒரு பெரிய தாக்குதலுக்கு திட்டமிட்டே பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. இதையடுத்து நாடாளுமன்றத்துக்குப் பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. நவீன சோதனைக் கருவிகளுடன் பல இடங்களில் தடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வி.ஐ.பி.க்களுக்கு வழங்கும் அடையாள அட்டைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



கூடங்குளம் அனுமின் நிலையத்தைப் பாதுகாக்கக் கோரி கத்திரியார் நாடார் இயக்கத் தலைவர் சந்திரன் ஜெயபால் தலைமையில் பிரசாரம் செய்வதைக் காணலாம்.

## தமிழக அமைச்சரவையில் விரைவில் பாரிய மாற்றம்?

(சென்னை)

தமிழக அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள் விரைவில் ஏற்படவிருப்பதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உள்ளாட்சித் தேர்தலில், அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை தேர்வு செய்யும் பொறுப்பு, மாவட்ட செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. சில இடங்களில் உண்மையான விசுவாசிகளை கண்டறிந்து, கட்சித் தலைமையே வேட்பாளர்களை அறிவித்திருந்தது. பெரும்பாலான இடங்களில், மாவட்ட செயலர்கள் கொடுத்த பட்டியலில் இருந்து வேட்பாளர்கள், தெரிவு செய்யப்பட்டனர். பெரும்பாலான மாவட்ட செயலர்கள் அமைச்சராக பொறுப்பு வகிப்பதால், தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி வேண்டப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தனர்.

இதனால், வெற்றிபெற வேண்டிய தொகுதிகளில் கூட தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. இதன் காரணமாக கட்சியில் கோஷ்டி பூசலுக்கும் வழி ஏற்படுத்திக் கொடுத்தனர். கோஷ்டி பூசல் மற்றும் சொந்தப் பிரச்சினைகளால் கட்சிக்கு ஏற்படுத்திய நெருக்கடி ஆகியன அமைச்சர்களின் மாற்றத்துக்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகிறது. சில அமைச்சரகள் அவர்களின் துறைகளை நிர்வகிப்பதில், போதிய திறமை இல்லாமல் இருப்பதாக அ.தி.மு.க. தலைமை கருதுகிறது. துறை சார்ந்த முடிவுகளை விரைவுபடுத்தி திட்டங்களை நிறைவேற்ற அமைச்சர்கள் சிலர் தவறுகின்றனர் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

# அதிக சம்பளத்துடன் வேலை வாய்ப்பு சாதனை படைக்கவுள்ளது இந்தியா



(புதுடில்லி)

இந்தியாவில் அதிக சம்பளத்துடன் நல்ல வேலை வாய்ப்புகள் கிடைப்பதால் 2015 ஆம் ஆண்டுக்குள் 3 இலட்சம் வெளிநாடு வாழ் இந்தியர்கள் நாடு திரும்புவர் என்று ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வேலை வாய்ப்பு ஆய்வு நிறுவனமான கெலி சர்வீசஸ் இந்தியாவின் மேலாண் இயக்குனர் கமல கரந்த் கூறுகையில், மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் தற்போது நம் நாட்டில் அதிக சம்ளத்துடன் கூடிய பாதுகாப்பான நல்ல வேலைகள் கிடைக்கின்றன.

குறிப்பாக தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் துறைகளில் மேலை நாடுகளைவிட நிலையான சம்பளம் கிடைக்கிறது. மேலும் உலக தரத்திலான கல்வி முறைகள், தரமான அறிவியல், பொறியியல் கல்வி நிறுவனங்கள் இவர்களை அதிகம் கவர்கின்றன.நாட்டின் பொருளாதார வளர்ச்சி சற்று குறைந்து காணப்பட்டாலும் விரைவில் மீண்டும் நீடித்த வளர்ச்சிப் பாதையில் செல்லும். அதனால் வேலை வாய்ப்புகள் பல்வேறு துறைகளில் பெருக வாய்ப்புள்ளது.

அதே வேளையில் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் நிதி நெருக்கடியால் வேலை வாய்ப்பின்மை அதிகரித்துள்ளது. ஆனால் இந்தியாவில் சிறந்த கல்வி, கலாசாரம், தொழில்நுட்பம், அறிவியல், மருத்துவத் துறைகளின் வளர்ச்சிகள் இந்தியர்களை ஈர்க்கின்றன.இதுபோன்ற காரணங்களால் வரும் 2015 ஆம் ஆண்டுக்குள் 3 இலட்சம் வெளிநாடு வாழ இந்தியர்கள் நாடு திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிராவை சேர்ந்தவர்கள் அதிகமாக நாடு திரும்புகின்றனர் என்று கமல் தெரிவித்தார்.

# இந்தியாவுக்கு அணு ஆயுதங்களை விற்பதற்கு விரும்பும் அமெரிக்கா

(புதுடில்லி)


வளரும் வல்லரசான இந்தியாவுடன் நவீன இராணுவத் தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்வதற்கும், போர் விமானங்களை மேம்படுத்துவதில் இணைந்து செயற்படவும் அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் அமெரிக்க காங்கிரஸ் சபையில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவுக்கு அமெரிக்கா, 6 பில்லியன் டொலர் அளவிற்கு ஆயுதங்களை விற்றுள்ளது. ஆயுத விற்பனை, கூட்டுப் பயிற்சி மூலம் இந்தியா உடனான இராணுவ உறவை மேலும் வலுப்படுத்த அமெரிக்கா விரும்புகிறது.

அத்தோடு கடல்சார் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஆகியவற்றிலும் இந்தியாவுடன் இணைந்து செயலாற்ற அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் விரும்புகிறது. இருதரப்பு இராணுவ உறவும் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்துள்ளது. இதுவரை இரு நாட்டு இராணுவங்களும் இணைந்து 56 முறை கூட்டுப் பயிற்சி மேற்கொண்டுள்ளன. இது பிற நாடுகளுடன் இந்தியா மேற்கொண்டுள்ள கூட்டுப் பயிற்சிகளை விட அதிகம்.

அமெரிக்காவின் எப் -16, 18 மற்றும் 126 ரக போர் விமானங்களை வேண்டாம் என இந்தியா கூறியது ஒரு பின்னடைவுதான் என்றாலும் கூட, ஜாயின்ட் ஸ்ட்ரைக் பைட்டர் ரக போர் விமானங்கள் இந்தியாவுக்கு ஏற்றதாக இருக்கும் என் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவிடம் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரியது துருக்கி



(புதுடில்லி)

காஷ்மீர் விவகாரம் குறித்து துருக்கி தெரிவித்த கருத்துக்கு இந்தியா தனது கடும்கண்டனத்தைத் தெரிவித்திருந்தது. இதனையடுத்து துருக்கி இந்தியாவிடம் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி இந்தியா துருக்கி உட்பட பல நாடுகள் பங்கேற்கும் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் துருக்கிப் பிரதமர் ரெஸிப் டையீப் எர்டோகான் காஷ்மீர் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு இந்தியத் தரப்பில் கடும் எதிரப்பு தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது மத்திய வெளியுறவுத்துறை அமைசசர எஸ்.எம்.கிருஷ்ணா துருக்கி நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் அஹமத் தாவூடோக்லுவிடம் காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி, அங்கு ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி நடைபெற்று வருவதை குறிப்பிட்டு துருக்கிப் பிரதமரின் பேச்சுக்கு இந்தியாவின் கண்டனத்தை தெரிவித்தார்.

இதனையடுத்து இந்தியாவின் உணர்வுகளை மதிப்பதாகவும், துருக்கி நாடு வேண்டும் என்றே இதை சர்வதேச பிரச்சினையாக்கவில்லை என்றும் எப்போதும் போல் இந்தியாவுடன் நட்புறவு கொள்ளவே துருக்கி விரும்புவதாகவும், மேலும் தங்கள பிரதமரின் பேச்சுக்கு நிபந்தனையற்ற மன்னிப்பு கோருவதாகவும் தெரிவித்தார்.

# ஏவுகணை ஒழுங்குக் கட்டமைப்பை பலிசீலித்தது இஸ்ரேல் இராணுவம்

உலகச் செய்திகள்




ஏவுகணை ஒழுங்குக் கட்டமைப்பினை இஸ்ரேல் இராணுவத்தினர் பரீட்சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.நாட்டின் மத்திய பகுதியிலுள்ள இராணுவத் தளத்தில வைத்து இந்த பரீட்சாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.நீண்ட தூர ஏவுகணையொன்றே இவ்வாறு பரீட்சிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.


ஈரானின் அணுத் திட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்கான தயார்ப்படுத்தலாக இதனை இஸ்ரேல் மேற்கொண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுவொரு நீண்ட கால திட்டமாக இருந்ததுடன், 2008 ஆம் ஆண்டு தமது நாடு இவ்வாறான பரீட்சாத்த நடவடிக்கை மேற்கொண்டதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

# கொரியாவில் அமெரிக்க படை நடமாடுவதற்கு தொடர்ந்தும் தடை

(வோஷிங்டன்)

தென் கொரியாவிலுள்ள அமெரிக்கப் படையினர்கள் வெளியே நடமாடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.பெண்ணொருவரை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அமெரிக்க படைவீரர் ஒருவருக்கு தென் கொரிய நீதிமன்றம் 10 ஆண்டு கால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இதனையடுத்து அமெரிக்க படையினர்கள் வெளியில் நடமாடுவதற்கு 30 நாட்கள் தடை ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த நிலையில்



தற்போது அது அடுத்த ஆண்டு ஜனவரி ஆறாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.வட கொரியா தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பு வழங்கும் பொருட்டு சுமார் 28 ஆயிரம் அமெரிக்கப் படையினர்கள் நட்பு நாடான தென்கொரியாவில் நிலை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனித வள அபிவிருத்தியில் நோர்வே முதலிடம்



ஐக்கிய நாடுகளின் மனித வள அபிவிருத்தி தொடர்பான தரப்படுத்தலில் நோர்வே முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளதுடன், கொங்கோ ஜனநாயக குடியரசு இறுதி இடத்தினைப் பெற்றுள்ளது.செழிப்பு, கல்வியின் தரம், ஆயுள் ஆகியவற்றின் அடிப்படையில் 187 நாடுகள் இதன்கீழ் தரப்படுத்தப்பட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்ரேலியா, நெதர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் முறையே இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களைப் பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.நியூசிலாந்து, கனடா, அயர்லாந்து, லிஸ்டன் ரைன்ஸ், ஜேர்மனி, சுவிடன் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

ஜப்பான், ஹொங்கொங், தென் கொரியா, சிங்கப்பூர், ஆகிய ஆசிய நாடுகளும் அதிஉயர் மனிதவள அபிவிருத்தி கொண்ட நாடுகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.மத்திய மனித அபிவிருத்தியை கொண்ட நாடாக 134 ஆவது இடத்தில் இந்தியா தரப்படுத்தப்பட்டுள்ளதுடன், சீனா, தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளும் இதில் அடங்குகின்றன.பாகிஸ்தான், பங்களாதேஷ நேபாளம் ஆகிய நாடுகள் குறைந்த மனித அபிவிருத்தி உடைய நாடுகளாக பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா பொதுச் செயலர் லிபியாவுக்கு பயணம்



லிபியாவில் அதிபர் கடாபியின் வன்முறை ஆட்சி முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து முதன்முறையாக தனது நேர்காணல் பயணத்தை மேற்கொண்டுள்ளார் ஐ.நா.பொது செயலாளர் பான்கி மூன்.இது குறித்து ஐ.நா.செய்தித் தொடர்பாளர் மார்ட்டின் நெஸிர்கி கூறுகையில் லிபியாவில் பயணம் மேற் கொண்டுள்ள ஐ.நா.பொது செயலாளர் பான்கி மூன் முதலில் அங்குள்ள தேசிய புரட்சி படையினரை சந்தித்து பேசுகிறார்.

இந்தப் பேச்சுவார்த்தை லிபியாவை வலிமைமிக்க மற்றும் தொழில் முனைவோரின் ஒரு புதிய வர்த்தக தேசமாக மாற்றும் என்பதில் சந்தேகமில்லை என்றார். இதனையடுத்து பான்கி மூன் பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரில் நடைபெறும் ஜி-20 நாடுகளின் கூட்டு கூட்டத்தில் கலந்து கொள்ள இருப்பதாக மார்ட்டின் தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தானின் எதிர்காலம்; துருக்கியில் மாநாடு ஆரம்பம்

(இஸ்தான்டில்)

ஆப்கானிஸ்தானில் எதிர்காலம் தொடர்பான மாநாடு துருக்கியில் ஆரம்பமாகியுள்ளது.யுத்தத்தால் பாதிகக்கப்பட்டுள்ள ஆப்கானில் இருந்து நேட்டோ படையினர்கள் வெளியேறவுள்ள நிலையில் இந்த மாநாடு இஸ்தான்புல்லில் நடைபெறுகின்றது.

உதவி நிறுவனங்கள், அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் அடங்கலாக 27 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய், பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.



ஆயுததாரிகளின் செயற்பாடுகளை தடுப்பதற்கு பாகிஸ்தான் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென ஆப்கான் மற்றும் அமெரிக்க ஆகியன வலியுறுத்தி வருகின்றன. எனினும் தமது நாடு அல் ஹைய்தா மற்றும் தலிபான் ஆயுததாரிகளின் புகலிடமாக இருக்கவில்லை என பாகிஸ்தான் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படகு கவிழ்ந்து 7பேர் உயிரிழப்பு

சட்டவிரோத குடியேற்ற வாசிகளின் படகு கவிழ்ந்ததது ஏழு பேர்பலியாகியுள்ளனர். இந்தோனேசியாவிலிருந்து சட்டவிரோத குடியேற்றவாசிகளுடன் வருகைதந்த படகே மூழ்கியுள்ளது. இதன்போது 7 பேர் உயிரிழந்ததுடன் சிலர் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன. ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரானைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் 57 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

என் தகப்பனார், தாயார் இருவரும் பெரும்பாலும் சண்டையிட்டே வாழ்ந்திருக்கிறார்கள். இந்தச் சண்டைகளின்போது என் தகப்பனாரின் நேர்மை அவரை எவ்வளவு குருட்டுத்தனமாக்கியது என்பதையும், தாயாரிடம் தற்காப்பு இல்லாது போனாலும் சொல்லாடல் மூலம் தகப்பனாருக்கு பதில் பிறக்க இடமில்லாமல் ஆக்குவதையும் விளைவு தாயாருக்கு சரீரபூர்வமான ஆபத்தாவதையும் இன்று நினைக்க ஒருவகையில் சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது.

உண்மையில் என் தகப்பனாரின் நேர்மை வியாபார உலகில் தான் என்பதையும் தாம்பத்ய வாழ்வில், உறவில், அவர் தாயாரை பயங்கரமாக ஏமாற்றியவர் என்பதையும் பின்னாடி உணர முடிந்தது. பார்க்கப்போனால் வியாபாரத்தில் காட்டிய நேர்மை அவருக்கு ஒரு போர்வையாகத்தான் இருந்திருக்கிறது.

இதற்கும் மேல், தகப்பனாரின் 'நேர்மை', அவரைப் பழி வாங்கும் மனோபாவமுள்ளவராக்கிற்று. என் தாயாரின் 'நேர்மையின்மை', அவரை தகப்பனார் உட்பட எவர் இழைத்த தீங்கையும் மறக்கக்கூடியவராயிற்று. முக்கியமாக நோய்வாய்ப்பட்டுள்ளவர் எவராயினும் அவருக்கு யாவற்றையும் மறந்து சிசுருஷை செய்ய தாயார் முன்வந்துவிடுவார்.

இது போன்றவற்றால் ஆரம்பத்தில் என் தகப்பனாரின் 'நேர்மை'யை கௌரவித்த என் மனம் தாயாரின் அன்பைத்தான் நிச்சயமானது என்று கொள்ள ஆரம்பித்திருக்கிறது போகப் போக. ஆனால், என் தகப்பனாரின் நேர்மையிலிருந்த போலித்தனத்தை, கொடுக்கல் வாங்கல் தனத்தையே இங்கே உணர்ந்து தெளிகிறேன் என்பதையும், 'நேர்மை'யை கௌரவிபபதிலிருந்து விலகியதாகாது இது என்பதையும் கவனிக்க வேண்டும்.

பொதுவான வாழ்விலும், ஆழமான மனோதர்மங்களிலும், கருத்துலகிலும் நான் சந்தித்த பிரச்சினைகளிடையில் இந்தப் பின்னணி இயங்கி இருக்கக்கூடும். – பிரமிள்

தீவிர இலக்கியம் ஒன்றையே தனது வாழ்க்கையாகக் கொணடிருந்த பிரமிள் கடைசிவரை திருமணம் செய்துகொளளவில்லை. வாழ்நாள் முழுதும் தனிமையிலேயே வாழ்ந்தார். வறுமையில் வாடிய போதும் ஒருபோதும் அவர் தன் சுயமரியாதையை இழந்ததில்லை. விரிந்த ஞானமும், தீர்க்கமான சிந்தனையும் கொண்ட பிரமிளின் விசித்திரமான நம்பிக்கை நியூமரோலஜி. அடிக்கடி தன் பெயரை பிரமிள், பானு சந்திரன், அரூப் சிவராம், ஔரூப் ஜீவராம், என்று மாற்றிக் கொண்டார். சமநிலையைக் குலைக்கும் நிகழ்காலமும், நிச்சயமற்ற எதிர்காலமும், அவரை ஜோதிடத்தின்பால் தள்ளியிருக்கக் கூடும்.

தமிழ் நாட்டுக்குப் புலம் பெயர்ந்து வந்த இவர் அதன் பிறகு இலங்கைக்குச் செல்லவேயில்லை. சில காலம் டெல்லிக்குப் போய் இருந்ததும் உண்டு. ஆனாலும், அவர் தமிழகக் கவிஞராகவே உணரப்பட்டார். வழக்கமாகத் தமிழ்நாட்டில் எழுத்தாளர்களும், கவிஞர்களும் வாழும் அவல வாழ்க்கைதான் அவருக்கும் வாய்த்தது. தமிழ் நாட்டில் தான் வாழ்ந்த காலத்தில் அவர் ட்ரவேனியன் என்ற ஆங்கில எழுத்தாளருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் தனது வாழ்க்கையின் நிலவரம் குறித்துப் பின் வருமாறு பதிவு செய்கிறார்:

"the talent – killing environs of my native Ceylon (Sri Lanka) and India(am an exile from 1972. I have not bothered to register myself-meaning, live herewith no citizen rights) have made me unproductive as a sculptor and painter....All my writings have been done but occasionally and in response to the bedeviling 'movements' that somehow go on."

ஒரு தீவிர இலக்கியவாதி எதிர்கொள்ள நேரும் 'திறமையைக் கொல்லும் சூழ்நிலை'யும் 'சலிப்பூட்டும்' தருணங்களுமே அவர் வாழ்க்கையில் நிரந்தரமாக கால்கொண்டு நின்றன. அந்த எரிச்சலூட்டும் சூழலை எதிர்கொண்டு அவர் தொடர்ந்து இயங்கியது உண்மையில் வியப்பூட்டவே செய்கிறது. இவருக்கு முன்னால் இதே போல் இயங்கிய பாரதியையும், புதுமைப்பித்தனையும் வாழும் காலத்தில் அலட்சியப்படுத்திக் கொன்ற தமிழ்ச்சமூகம் இவரையும் அதேபோல் கொன்று விட்டது என்பது துரதிருஷ்டமே. 'போன மாட்டைத் தேடுவதும் இல்லை, வந்த மாட்டைக் கட்டுவதும் இல்லை' என்பது நமது தமிழ்ச்சமூகத்தின் கல்யாண குணங்களில் ஒன்று. எனவே, அவர் காலமான போது, அது பலருக்கும் தெரிந்திருக்கவில்லை. எனினும், உலகின் சிறந்த கவிதைகளில் ஒன்றை அவர் எழுதி இருக்கிறார். அது காலங்கள் தோறும் தமிழ் கூறும் நல்லுலகத்தின் கவனத்தில் இருந்தே தீரும்.

"சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச்செல்கிறது."

– எம்.ஜி.சுரேஷ்

# வினைத்திறன் மிக்க நிர்வாகம் யாழ். மாநகரசபை முதலிடம்



(யாழ்ப்பாணம்)

வினைத்திறன் மிக்க நிர்வாகம் மற்றும் நிர்வாகத்திறமைக்கான போட்டியில் யாழ். மாநகரசபைக்கு முதலிடம் கிடைத்துள்ளது.

வட மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் 2009 - 2010 ஆம் ஆண்டில் வடக்கின் உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட உள்ளூராட்சி நிர்வாக திறமை போட்டியில் யாழ். மாநகர சபைக்கு முதல் இடம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்படடுள்ளது.

இது குறித்து வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆ.விஜலக்சுமி மற்றும் வட மாகாண பிரதம செயலாளர் ஆகியோரால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ் யாழ். மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

# வலுவிழந்தோருக்கான விசேட சித்திரப் போட்டி




(கொழும்பு)

சர்வதேச மாற்று ஆற்றல் படைத்தோர் தினத்தை முன்னிட்டு வலுவிழந்தோருக்கிடையிலான சித்திரப்போட்டியொன்றினை நடத்த கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட ஆண் - பெண் மாற்று ஆற்றல் படைத்தவர்கள் இச்சித்திரப் போட்டியில் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்று ஆற்றல் படைத்தவர்களுக்கு பொருத்தமான இடத்தை வழங்குவோம் எனும் தொனிப்பொருளில் அமையவுள்ள இச்சித்திரப் போட்டியில் வரையப்பட்ட சித்திரங்களின் பின் புறத்தில் தமது கிராம சேவையாளரின் கையொபபத்துடன் பரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன் திருகோண மலையிலுள்ள கிழக்கு மாகாண சமூக வேவைகள் திணைக் களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்படடுள்ளது.



# விதைநெல் விற்ற பணம் எங்கே உத்தியோகத்தர் மீது வழக்கு

(கொழும்பு)

அரசாங்கத்திற்குச் சொந்தமான விதை நெல்லை விற்பனை செய்து பெற்றுக்கொண்ட பணத்தை மோசடி செய்ததாகக் கூறப்படும் கெபிட்டிகொல்லாவ பகுதியைச் சேர்ந்த விவசாய ஆலோசகர் ஒருவருக்கு எதிராக அனுராதபுரம் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த தினத்தில் இந்த நிதி மோசடி இடம்பெற்றிருக்கலாம் என சட்ட மா அதிபரினால் பிரதிவாதி மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது. பிரதிவாதி இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை மோசடி செய்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# மின் விபத்துக்களைத் தடுக்க விசேட நடவடிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

அதிக மழையுடனான கால நிலை காரணமாக இடியால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள பொது மக்களின் ஒத்துழைப்பை மின்சக்தி அமைச்சு கோரியுள்ளது.

இதுதொடர்பில் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மின் கம்பங்களுக்கும் மின்கம்பிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மரங்கள் காணப்படின் அதனை வெட்டி அகற்றுவதன் மூலம் உயிரிழப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மின்கம்பங்கள் மற்றும் மின்சார கம்பிகளில் மரம் முறிந்து விழுவதன் காரணமாக பல உயிர் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே மின்கம்பிகளில் மரம் முடிந்து விழும் நிலையில் இருப்பினும் அதனை உரிய வகையில் வெட்டி அகற்ற உரிமையாளர்கள் தொடர்பில் பொது மக்கள் முறைப்பாடுகளை செய்ய முடியும்.

அந்த வகையில் 1987 என்ற இலக்கத்திற்கோ அல்லது 1910 என்ற இலக்கத்திற்கோ அறிவிக்க முடியும் என மின்சக்தி அமைச்சு பொதுமக்களை கோரியுள்ளது.

# பயிற்சி ஆசிரியர்களுக்கு பாராட்டும் சான்றிதழும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரிய கல்லூரியில் பயிற்சிகளை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்கள் 223 பேருக்கு சான்றிதழ் வழங்கும் மற்றும் பதக்கம் அணிவிக்கும் நிகழ்வு கோப்பாய் கலாசாலை மண்டபத்தில் நேற்று புதன்கிழமை மாலை நடைபெற்றது.




கைத்தொழில் மற்றும் வணிகததுறை அமைச்சர் ரிசாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் வடமாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் எஸ்.எல்.டீன் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கோப்பாய் கலாசாலை அதிபர் கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின்போது, கோப்பாய் கலாசாலையின் பயன்பாட்டுக்காக கணினியும் அமைச்சரினால் வழங்கிவைக்கப் பட்டது.

# சிவனொளிபாத யாத்திரை

(கொழும்பு)



சிவனொளிபாத பருவகாலம் எதிர் 10 ஆம் திகதி ஆரம்ப மலைக்கான யாத்திரை வரும் டிசெம்பர் மாதம் மாகவுள்ள நிலையில் இது தொடர்பிலான கலந்துரையாடல் கூட்டமொன்று நேற்று முன்தினம் ஹட்டன் - டிகோயா நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜி.கு... ரசிறி தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடல் கூட்டத்தில் சிவனொளிபாத மலை விகாராதிபதி தம்பஹால சீலாநந்த தேரர் ஹட்டன் - டிக்கோயா நகரசபைத் தலைவர் ஏ.நந்தகுமார் அம்பக முவ பிரதேச சபை தலைவர் வெள்ளையன் தினேஸ் ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவிசந்திரசிங்ஹ உட்பட அரச நிறுவனங்களின் அதிகாரிகள் உத்தி யோகஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# கடலில் விழுந்தவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதேசத்தில் சின்ன முத்துவார பாலத்தடியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது தவறிவீழ்ந்தவரின் சடலம் நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று ஐந்தாம்பிரிவைச் சேர்ந்த முகம்மட் பைசால் என்பவரே இவ வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இவர் மீன் பிடித்துக் கொண்டிருந்ததாகவும் வலையில் சிக்கய மீனை இழுக்கமுற்பட்டபோது கடலில் தவறி விழுந்ததாகவும், பின்னர் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

சடலம் நேற்று எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.


# கல்விக்கான ஊக்குவிப்பு பாதுகாப்பு படையினர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)


பாதுகாப்புப் படையினரால் வடக்கில் சில நலததிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் அண்மையில் பருத்தித்துறையில் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

இராணுவத்தின் 521 வது சிவில் பாதுகாப்பு பிரிவினால் இதன்போது 51 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

நெல்லியடி மத்திய கல்லூரி, வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரி, ஹாட்லி கல்லூரி, நெல்லியடி விக்னேஸ்வர கல்லூரி, சிவப்பிரகாசம் கல்லூரி, நெல்லியடி அரசாங்க கலவன் பாடசாலை என்பவற்றை சேர்ந்த மாணவர்களுக்கே இந்தப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.



நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியிருந்த அன்பே சிவம் நிறுவனம், ஒவ்வொரு மாணவருக்கு தலா 1000 ரூபா வைப்பு புத்தகங்களை வழங்கியது.





கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களால் வருடாந்தம் நினைவுகூரப்படும் இறந்போன விசுவாசிகளின் நினைவுநாள் நேற்றுமுன்தினம் யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெற்றது. இதில் இரங்கற் திருப்பலியை அமலமரித் தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்திரு. போல்நட்சத்திரம் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலி இடம்பெறுதையும், கலந்துகொண்ட இறந்தவர்களின் உறவினர்களையும் காணலாம். (21)

# சீரற்ற மின்சார விநியோகம் காரணமாக பழுதடைந்தன எக்ஸ்றே இயந்திரங்கள்

## யாழ்.போதனா வைத்தியசாலையின் அவலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் "எக்ஸ்றே" பிரிவில் பழுதடைந்திருக்கும் இரண்டு இயந்திரங்களையும் வைத்தியசாலைக்கு கிடைக்கின்ற மின்சாரம் சீராக இல்லாத நிலையில் இயங்க வைப்பது கடினம் என அவ் இயந்திரங்களை பழுது பார்த்த தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவித்திருப்பதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் எக்ஸ்றே பிரிவில் மூன்று என்ஸ்றே இயந்திரங்கள் தொழிற்பட்டு வந்தன. இவற்றில் ஏற்கனவே ஒரு இயந்திரம் பழுதடைந்த நிலையில் மற்றைய இயந்திரமொன்றும் பழுதடைந்துள்ளது.

இவற்றில் ஒன்று தொழில்நுட்பவியலாளர்களால் திருத்தப்பட்டு இயங்கவைக்கப்பட்டிருந்த போதும் அதுவும் சில நாட்களில் திரும்பவும் பழுதடைந்துள்ளது. இவ்வாறான நிலையில் அவ் இயந்திரங்களை மேலும் நுணுக்கமாகப் பரிசீலித்த தொழில்நுட்பவியலாளர்கள் வைத்தியசாலைக்கு கிடைக்கின்ற மின்சாரம் சீரின்மை காரணமாகவே இவ் இயந்திரங்கள் பழுதடைவதாக சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக மிகுதியாக செயற்பட்டு வரும் ஒரு எக்ஸ்றே இயந்திரத்தின் மூலமாக வைத்தியசாலையின் பகுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள், வெளிநோயாளர், அவசர நோயாளர்களுக்கு சேவை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வெளிநோயாளர்களுக்கு திகதி கொடுக்கப்பட்டே எக்ஸ்றே எடுக்கப்படுவதாகவும் தினமும் விடுதி நோயாளர் மற்றும் அவசர நோயாளர்களுக்கு மிகுந்த சிரமத்தின் மத்தியில் எக்ஸ்றே சேவை வழங்க வேண்டியுள்ளதாகவும் அவ் அதிகாரி குறிப்பிட்டார். (பா)

## சம்பந்தன்...

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த விசேட இரகசிய குறிப்பில் தூதுவர் இந்தத் தகவல்களை குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப் பகிர்வு, விரிவான அரசியல் சாசனத் திருத்தம் ஆகியன தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் சரத் பொன்சேகா இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டதாகவும், இதில் சம்பந்தன் கைச்சாத்திடவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பேகர் ஆகிய சகல இன மக்களினாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வு குறித்து இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தது.

தேசிய பாதுகாப்பு, நிதிக் கொள்கை, குடிவரவு குடியகல்வு போன்ற மிக முக்கியமான விடயங்கள் தவிர்ந்த ஏனைய சகல விடயங்கள் தொடர்பிலும் மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களுக்கு இடையில் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள இணங்கப்பட்டிருந்ததாக அமெரிக்கத் தூதுவர் தெரிவித்திருந்தார்.

தேர்தலுக்கு முன்னைய காலத்தில் சம்பந்தனுக்கும் அமெரிக்கத் தூதுவருக்கும் இடையில் பல தடவைகள் சந்திப்புக்கள் நடைபெற்றுள்ளன.

இடம்பெயர் மக்களை விடுவிப்பதனை தவிர ராஜபக்ஷ அரசாங்கம் தமிழ் மக்களுக்கு பெரிதாக எதனையும் செய்யவில்லை என சம்பந்தன் தெரிவித்ததாக புட்டினாஸ் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகா வெற்றியீட்டக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதாக தெரிவித்திருந்தார்.

இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியதன் பின்னர், சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவை ஆட்சி நடத்தினால் அது தமிழ் மக்களுக்கு பாதிப்பாக அமையும் என சம்பந்தன் தெரிவித்ததாக, புட்டினாஸ் குறிப்பிட்டிருந்தார்.

மனித உரிமை மற்றும் மனிதாபிமான விவகாரங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது என சம்பந்தன் குறிப்பிட்டிருந்ததாக அமெரிக்கத் தூதுவர் தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

## அமைச்சர்களின்...

தேசப்பற்று குறித்து தெரியாதவர்கள் தேசப்பற்று பற்றி பேசுவது வேடிக்கையாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தந்தை செல்வாவின் சிலை திருமலையில் உடைத்து சேதமாக்கப்பட்டதனைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, தந்தை செல்வாவின் சிலை உடைப்புக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். இன ஒற்றுமை பற்றி ஓயாமல் குரல் கொடுப்பது அரசின் கபட நாடகங்களில் ஒன்றாகும். முன்பு ஒருபோதுமே இல்லாத அளவுக்கு இனத்துவேஷம் வளர்ந்து கொண்டே போகிறது. அமைச்சர்கள் சிலர் காலத்துக்குக் காலம் கக்கும் விதத்தை அரசு முதலில் கட்டுப்படுத்தி இருக்க வேண்டும். அத்தகைய விஷமே சிலரில் ஊறிப் போய் இன வெறியை உருவாக்குகின்றது. இத்தகைய இன வெறியர்களின் செயற்பாடுகள் மறுபுறத்தில் சிலரின் உள்ளத்தில் வெறி உணர்வுகளை ஏற்படுத்துமேயன்றி வேறு எதுவித பிரயோ சனத்தையும் ஏற்படுத்தாது.

சமாதானமான சூழ்நிலை இருக்கும் போது துவேஷம் கொண்ட ஒருவன் இத்தகைய ஓர் ஈனச்செயலை நாட்டின் எப்பகுதியிலும் செய்யலாம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். முட்டாள்தனமான இதுபோன்ற செயல்களை நாட்டின் எப்பகுதியிலும் செய்யலாம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய செயல்களே நாட்டில் அமைதி குறைவதற்குக் காரணமாகும்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கப் பெரியார் ஒருவர் அமெரிக்கா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவியிறக்க வேண்டுமென அரசுக்கு உபதேசித்துள்ளார். தேசப்பற்று என்றால் என்ன என்பதைப் பற்றி தெரியாதவர்கள் எல்லாம் தேசப்பற்று பற்றி பேசுவது வேடிக்கை யாகும். 'தேச வழமை' என்றால் என்னவென்று தெரியாத அமைச்சர் நாட்டில் மழை பெய்தாலும் தேச வழமையை ஒழிக்க வேண்டும் என்பார். தேசவழமை, கண்டிய சட்டம், இஸ்லாமிய சட்டம் போன்றவை அந்தந்த இன மக்களை சார்ந்தவையாகும். அம்மக்களின் ஒத்தாசையின்றி அவற்றை மாற்றும் உரிமை யாருக்கும் இல்லை. பிற மாவட்டத்தவர்கள் யாழ்ப்பாணத்தில் காணி வாங்க முடியாது என்பது சிலரின் கற்பனையாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## யுத்தத்தால்...

தொடரும் உணவு நெருக்கடி ஆகியவற்றுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது மத்திய அவசர உதவித்திட்ட நிதியத்திற்கு 16 ஆசிய பசுபிக் நாடுகள் 23 மில் லியன் அமெரிக்க டொலர்களை தந்துள்ளன. மிகப்பெரிய பங்களிப்பு அவுஸ்ரேலியாவிடம் ( 4 மில்லியன் அமெரிக்க டொலர்) இருந்தும் அதற்கு அடுத்து யப்பானிடமிருந்து 3 மில்லியன் அமெரிக்க டொலரும் கிடைத்ததாக OCHA tpd அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மனிதாபிமானப்பணிகளுக்கு மொத்தமாக பங்களிப்பு செய்த நாடுகளில் யப்பான் நாடு தான் (510 மில்லியன் அமெரிக்க டொலர்) முதலாவது இடத்திலும் இரண்டாவதாக அவுஸ்ரேலியா (218 மில்லின் அமெரிக்க டொலர்) உள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியா, யப்பான், சீனா, தென் கொரியா மற்றும் நியூசீலாந்து ஆகிய ஐந்து ஆசிய பசுபிக் நாடுகள் ஆபிரிக்காவின் மனிதாபிமான நெருக்கடிக்கு 275 மில்லியன் அமெரிக்க டொலர்களை தந்து உதவியுள்ளது. உலக நாடுகளின் பங்களிப்பில் அத்தொகை 18 சதவீதமாகும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா...

வவுனியாவில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் இவர், இரும்பு வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக புதுக்குடியிருப்புக்கு சென்றிருந்ததாகவும் கடந்த 27 ஆம் திகதியில் இருந்து இவரை குடும்பத்தினர் காணவில்லை என குடும்பத்தினர் தேடிவந்தனர்.

இந்நிலையிலேயே புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள கிணற்றொன்றில் ஆணிண் சடலம் காணப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் ஜெயபாலனின் உறவினர்கள் சென்று பார்வையிட்ட போது அவரது சடலம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு சென்ற முல்லைத் தீவு மாவட்ட பதில் நீதவான் விசாரணைகளை மேற் கொண்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற் கொள்ளுமாறு பொலிஸாருக்கு பணித்தார்.

இதேவேளை, சந்தேகத்தின் பேரில் இவருடன் சென்றதாக கருதப்படும் மூன்று பேரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# 4 இலங்கை மீனவர்கள் மீட்பு

தமது மீட்புப் படகு தீப்பற்றிய நிலையில் உயிர்காப்புக் கலமொன்றில் 3 நாட்களாக உணவு, குடிநீர் எதுவுமின்றித் தத்தளித்துக்கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் நால்வர் மீட்கப்பட்டுள்ளர்.

இந்த உயிர்காப்புக் கலத்தை தென்னாபிரிக்க அதிகாரிகளின் வற்புறுத்தலின் பேரில் கடந்த மாதமே மேற்படி மீனவர்கள் வாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

57.5 அடி நீளமான, தேஷான் லங்கா என்னும் இம்மீன்பிடிப் படகு சியாரா லியோனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது கடந்த ஞாயிறன்று தீப்பற்றிக் கடலில் மூழ்கியது.

## நிர்வாகசேவை....

செல்வி பி.நிவேதிகா - யாழ்ப்பாணம், எல்.கவிக்குமார் - நீர்வேலி, ரி.பிரிந்தாகரன் - யாழ்ப்பாணம், செல்வி. எம்.விஷ்ணுபிரியா - பருத்தித்துறை, செல்வி. ஆர்.பகிரதி- புலோலி, பருத்தித்துறை, செல்வி. கே.துளசி - யாழ்ப்பாணம், செல்வி. ரி.தட்சாயினி- நீர்வேலி, ஆர்.குருபரன் - யாழ்ப்பாணம், எஸ்.சிவாகர் - சாவகச்சேரி, செல்வி. மாலதி - இளவாலை

வவுனியா மாவட்டம்

என்.ஜெயக்குமார் - வவுனியா, எல். பிரதாபரன் - வவுனியா

## இலங்கையர்...

சமர்ப்பிக்கப்பட்டது.அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்த அறிக்கையை சமர்ப்பித்தார். இந்தக் கூட்டத்தொடரின் போது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு நாடுகளுக்கும் தெளிவுபடுத்தப்பட்டது. அதன் பெறுபேறாக இலங்கைக்கு பாகிஸ்தான், கியூபா, சீனா, ரஷ்யா, தாய்லாந்து, சிலி, மலேசியா, மற்றும் அல்ஜீரியா உள்ளிட்ட 8 நாடுகள் ஆதரவு நல்கியுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

## நகரப் பாடசாலை....

அபிவிருத்தி திணைக்களத்திடமும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமும் இருந்து யாழ்.மாநகரசபை கையேற்க வேண்டுமெனவும் குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள் அரியாலை கிழக்குப் பகுதிகளில் படைத்தரப்பால் சட்ட விரோதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் அகழ்வை பொலிஸாரின் உதவியுடன் கட்டுப்படுத்துவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளார்.

மீள்குடியேற்றம் நடைபெற்ற அரியாலை கிழக்கு, பூம்புகார் வீதிகளை மக்களினதும் வாகனங்களினதும் போக்குவரத்துக்காக அடுத்தாண்டு முற்பகுதியில் விரைவாக செய்து முடிக்க வேண்டுமெனவும் துறைசார்ந்தவர்களிடம் பணிப்புரை விடுத்த அமைச்சர் மணியந்தோட்ட வீதியை விரைவில் புனரமைத்துத் தருவதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் சொந்தக் காணிகள் இல்லாதவர்களுக்கு அரச காணிகளைப் பகிர்ந்தளிப்பது, கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவது மற்றும் வயற் காணிகளில் கட்டடங்களை அமைப்பது நிறுத்தப்படுவது, மின்சார விநியோகம், குடிநீர்ப்பிரச்சினைக்குத் தீர்வு நீர்வடிகால்களின் தற்போதைய நிலைப்பாடு சுகாதாரம் டெங்கு ஒழிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப் பட்டன.


இந்தக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிதரன், சரவணபவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## புலிகளின்.....

கப்பல்கள் மற்றும் பெற்றோல் நிலையங்கள் உள்ளன.


வெளிநாடுகளில் குமரன் பத்மநாதன் என்ற கே.பி.க்கு 600 அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்துக்கள் தொடர்பில் அசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும். வன்னி மக்களிடம் கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் கே.பி.யிடமே இருக்கின்றன. அரச மாளிகையில் சுகபோகம் அனுபவித்துக்கொண்டிருக்கும் கே.பியிடமுள்ள அந்த சொத்துக்கள் அனைத்தையும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவி வன்னித் தமிழ் மக்களிடத்திலேயே ஒப்படைக்க வேண்டும்.

எரிபொருள் விலைகளை அதிகரித்திருக்கின்றன. மகிந்த சிந்தனை பொது மக்களின் வயிற்றில் அடித்துவிட்டது. அது மட்டு மல்லாது சாதாரண நிலையிலிருந்து முன்னேறப் பாடுபடும் மக்களுக்கு இடையூறாகவும் அரசு விளங்குகின்றது என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.



# பிரிவினைவாதத்தை இலக்காக வைத்து தமிழ் அரசியல்வாதிகள் செயற்படுகின்றார்

## அமைச்சர் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



நாட்டில் பிரிவினைவாதத்தையே இலக்காகக்கொண்டு செயல்படும் சில தமிழ் அரசியல்வாதிகள் ஒஸ்லோவுக்கும் அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் சென்று இலங்கை அரசுக்கு எதிராக பிரயத்தனம் மேற்கொள்ளும் படி அந்த நாடுகளில் உள்ள அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றார்கள் என அமைச்சர் விமல் வீரவன்சவும் விமர்சனம் செய்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தயட்ட கிருல்ல கண்காட்சியை முன்னிட்டு பதவியா நகரில் ஜனசென வீடமைப்பு கிராமமொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும்போது பிரபாகரனை காப்பாற்றுவதற்காகவும் யுத்தத்தை இடைநடுவில் நிறுத்துவதற்கும் மேற்படி நாடுகள் இலங்கை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் பல பிரயத்தனங்களை மேற்கொண்டன. எதற்கும் அடி பணியாத ஜனாதிபதி ஒரே அடியில் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்தார். தற்பொழுதும்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலங்கையைப் பிரித்து ஆளவதற்கு எத்தனிக்கும் எவ்வித முயற்சிகளையும் ஜனாதிபதியும்

அரசும் முறியடிப்பதற்கு ஒரு போதும் தயங்கப்போதில்லை.

அன்று யுத்தத்திற்காக தமிழ் பிரிவினைவாதிகள் தமிழ் யுவதிகளை தற்கொலைப்படையாக அனுப்பி நாடு முழுவதும் மனிதப படுகொலைகளை மேற்கொண்டனர். ஆனால் தற்பொழுது வெளிநாட்டில் வாழும் தமிழ் பிரிவினைவாதிகள், அங்கு சொகுசாக வாழ்ந்து கொண்டு இலங்கையின் பிரிவினைக்கு கோஷம் எழுப்புகின்றனர். அவர்கள் வாழும் நாடுகளில் தொடர்ந்தும்

அவர்கள் வாழ்வதென்றால் இலங்கையில் ஏன் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும்? இது அவர்களது குறிக்கோளாகும்.

இவர்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் ஜனாதிபதி முறியடிப்பார்.

## மாணவர் சீருடைக்கு 1554 மில்லியன் ஒதுக்கீடு

அரசாங்கப் பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்துக்கான சீருடை விநியோகத்துக்காக 1554 மில்லியன் ரூபாவை ஒதுக்க அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்பிததிருந்தார்.

இதன்படி 58 இலட்சம் மீற்றர் வெள்ளை துணி, 9 இலட்சத்து 80 ஆயிரம் மீற்றர் வெள்ளை காற் சட்டைத்துணி, 7 இலட்சத்து 70 ஆயிரம் மீற்றர் நீல நிறக் காற் சட்டைத் துணி 4 இலட்சம் மீற்றர் மத குருக்களுக்கான காவித்துணி என்ற வகையில் இறக்குதி செய்யப்பட உள்ளது. இவற்றிற்கு 1054 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## மாணவர்களிடம் 2500 பெற்று மாணவர்களுக்குப் பாராட்டுவிழா

நல்லூர் கோட்டப்பாடசாலை ஒன்றில் மாணவர்களிடம் 2500 பெற்று மாணவர்களுக்கு பாராட்டு விழாவினை செய்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. குறித்த விழா பற்றி மேலும் தெரியவருவதாவது, தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் விழாவினை நடாத்துவதற்கு பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களிடம் இருந்து 2500 ரூபா பணம் பெற்றுக்கொள்வதற்கு அதிபர் தலைமையில் நடைபெற்ற விழா ஏற்பாட்டுக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குறித்த பாடசாலையில் தரம் 5 வரையுமே வகுப்புக்கள் இடம்பெறுகின்றன. இந்த நிலையில் மாணவர் புதிதாக இணைய இருக்கும் பாடசாலைக்கும் பணம் செலுத்தவேண்டிய நிலையில் இருப்பதாக சில பெற்றோர் விசனம் தெரிவித்தனர். குறித்த பாடசாலையில் வருமானம் குறைந்த மாணவர்களே கல்வி கற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை பாராட்டுவிழாவிற்கு வரும் மாணவர்கள் வெள்ளை முழுக் காற்சட்டை அணிந்து வரவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்



### இராசா மயில்வாகனம்

**கந்தரோடை மேற்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசா மயில்வாகனம் நேற்று (03.11.2011) வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் கந்தரோடை மேற்கு சுன்னாகத்தில் அமைந்துள்ள அவரது இல்லததில் இன்று வெள்ளிக்கிழமை (04.11.2011) நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 1.30 மணிக்கு சங்கமபுலவு இந்துமாயனத்திற்கு எடுத்துச் செல்லபபடும்**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்:**
**குடும்பந்தினர்.** (C/134)

## அபராதம் விதிப்பு

மது அருந்தி பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த இரு நபர்களுக்கு யாழ். நீதிமன்றம் தலா மூவாயிரம் ரூபா குற்றம் பணம் விதித்துத் தீர்ப்பளித்தது. நேற்றைய தினம புன்னாலைக்கட்டுவன், திருநெல்வேலிப் பகுதிகளில் மது அருந்திவிட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த இருவர் கோப்பாய் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்யப் பட்டது. (பா)

## ஊர்காவற்துறை மாவட்ட வைத்திய பிரிவு 2012 முதல் இரண்டு பிரிவுகளாகும்

ஊர்காவற்துறையில் இயங்கிக்கொண்டிருந்த மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவானது எதிர்வரும் 2012 ஆம் ஆண்டில் இருந்து இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இயங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவுப் பகுதியில் உள்ள நெடுந்தீவு முதற்கொண்டு வேலணை பிரதேச செயலர், ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் அனைத்தும் இணைந்து ஊர்காவற்துறை மாவட்ட சுகாதாரத் துறை வைத்திய அதிகாரி பிரிவாக இயங்கிவந்துள்ளது. இவ்வாறு இயங்கி வந்துள்ளபோதும் போக்குவரத்து பிரயாணக் கஷ்டங்கள், அதிகதூரம், காலதாமதங்கள், போன்ற இன்னோரன்ன விடயங்களை உள்ளடக்கியதன் பேரில் இந்த ஊர்காவற்துறை மாவட்ட அதிகாரி பிரிவானது பிரிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி மண்டைதீவு ஆகிய இடங்கள் வேலணை சுகாதார மாவட்ட வைத்திய அதிகாரி பிரிவினுள்ளும், அனலைதீவு, எழுவைதீவு, காரைநகர், ஊர்காவற்துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகள் தற்போது இயங்கிவரும் ஊர்காவற்துறை மாவட்ட மாவட்ட வைத்திய அதிகாரி பிரிவென்று தொடர்ந்தும் இயங்கிவர இருக்கின்றது.

வேலணைப் பிரிவிற்கான மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியினது அலுவலகப் பணிகள் யாவும் தற்காலிகமாக வேலணையில் இயங்கிவருகின்ற அரசினர் ஆதார வைத்தியசாலையில் உள்ள கட்டடமொன்றில் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (05)




யாழ் - கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில், அபிவிருத்தி - மீள்குடியமர்வு பற்றிப் பேசப்பட்டுக் கொண்டிருந்தபோது தூங்கி வழிந்த கூட்டமைப்பு எம்.பியின் படத்தை இணையத் தளங்கள் வெளியிட்டுள்ளன. சுன்னாகத்தில் அமைக்கப்படவுள்ள கைத்தொழில் பேட்டையில் தனக்கு முதலீடு செய்ய வாய்ப்புத்தரவில்லை எனத் தனது வியாபாரம் தொடர்பாகத்தான் வாய் திறந்தாரே தவிர, மக்களுக்கான அபிவிருத்தி பற்றிக் கதைக்கப்பட்ட நேரங்களில் எல்லாம் சரவணபவன் எம்.பி. தூங்கியபடி இருந்தார் என அவை எழுதியுள்ளன.

## 10 கோடிக்கு இரத்தினக்கல் விற்பனை

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த செவ்வாய்க் கிழமை நடத்தப்பட்ட ஏல விற்பனையில் அரியவகை நீலக்கல் ஒன்று 4 கோடி ரூபாவிற்கு விற்பனையாகியுள்ளது.

இந்த ஏலத்தின் போது மொததம் 100 மில்லியன் ரூபாவிற்கு இரத்தினக்கற்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும் இதன் மூலம் 55 மில்லியன் வருமானம் பெறப்பட்டதாகவும் சுற்றாடல் துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா கூறியுள்ளார்.

# காணிப் பதிவுக்கு எதிராக மனு விசாரணை 9 ஆம் திகதி ஒத்திவைப்பு

வடக்கு, கிழக்கில் காணி உரிமையாளர்கள் தமது விபரங் களைப் பதிவுசெய்யக்கோரி காணி ஆணையாளர் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. நீதிபதி டபிள்யூ.பி. ரஞ்சித் சில்வா முன்னிலையில் இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது வழக்கின்வாதிகள், பிரதிவாதிகள் ஆகிய இரு தரப்பினரும் சுற்றறிக்கையின் ஆங்கில மொழிபெயர்ப்பை கருத்திற்கொள்ள அவகாசம் கோரிய நிலையில் இவ்வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப் பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தரணி மொஹான் பாலேந்திரா ஊடாக இம்மனுவை தாக்கல் செய்திருந்தார்.

காணி ஆணையாளர் திணைக்களத்தின் சுற்றறிக்கையானது குரோதமனப் பாங்குடன் சட்டவிரோதமான வகையில், வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைக ளைப் புறக்கணிக்கும் வகையில் உள்ளதாக மனுதாரரான சுமந்தின் எம்.பி. தெரிவித்துள்ளார். தமக்குச் சொந்தமான காணிகள் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ளன எனவும் இந்தச் சுற்றறிக்கையினால் தான் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சுற்றறிக்கையை இரத்துச் செய்யுமாறும் உத்தரவிடுமாறு கோரியும் தமது மனு தொடர்பான வழக்கு விசாரணை முடியும்வரை சுற்றறிக்கையின்படி செயற்படுவதை இடைநிறுத்துமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக்கோரியும் மனுதாரரான எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. இவ்வழக்கைத்தாக்கல் செய்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 4 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.